Registered as a news paper

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 தை 26 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 துல்ஹஜ் 17 (09.02.2004) திங்கட்கிழமை இதழ் :131

ஸ்ரீ முருகன் ஸ்தாபனத்தாரின் மற்றுமோர் சேவை
வெளிநாடுகளில் வசிக்கும் உறவுகளிடமிருந்து
WESTERN UNION | MONEY TRANSFER | SM வெஸ்டன் யூனியன் | பணப் பரிமாற்றம்
மூலம் 20 நிமிட நேரத்தில் உங்கள்
கைகளில் பணம்கிடைக்க எம்மிடம் நாடுங்கள்
ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
303, K.K.S.வீதி, யாழ்ப்பாணம்
T.P: 021 222 5392
Fax: 2223214
E-Mail: smskr@eureka.lk
சிவன்கோவில் வீதி,
காரைநகர்.
T.P: 060 2212472
(சி/2201)

## வரப்போகும் தேர்தலில் ஐ.தே.க. வெற்றி பெறும்!

### தவிசாளர் மலிக் சமரவிக்கிரம தெரிவிப்பு

(கொழும்பு)

நடைபெறப்போகும் நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி உறுதியான வெற்றியைப்பெறுமெனவும், நாடாளுமன்றத்தை கலைக்க ஜனாதிபதி எடுத்த முடிவையிட்டுத் தமது கட்சி எந்தவித குழப்பமும் அடையவில்லை என்றும் ஐ.தே.க.வின் தவிசாளர் மலிக் சமரவிக்கிரம தெரிவித்தார்.

தனியார் வானொலி ஒன்றுக்கு அளித்த பேட்டியில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை மக்கள் ஐக்கிய தேசியக் கட்சி மீண்டும் அதிகாரத்துக்கு வரும்வகையில் தமது வாக்குகளை அளித்து தெளிவான ஆணையை வழங்குவார்கள்.

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி, சமாதான முயற்சிகளை முன்கொண்டு சென்றதுடன், பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்தி வெளி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அச்சம் காரணமாகவே ஜனாதிபதி சந்திரிகா நாடாளுமன்றத்தை திடீரெனக் கலைத்தார்!



### பிரதமர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா திடீரென்று ஏற்பட்ட அச்சம் காரணமாகவே நேற்றுமுன்தினம் இரவு நாடாளுமன்றத்தைக் கலைத்தாரென பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது -

நடைபெறவுள்ள மாகாணசபைத் தேர்தலில் தோல்வியடையலாம் என்ற அச்சம் காரணமாகவே ஜனாதிபதி இந்த நடவடிக்கையை மேற்கொண்டார்.

சுதந்திரதின உரையில் சகல கட்சிகளும் இணைந்து அரசியல்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து உதயசூரியன் சின்னத்தில் போட்டி!

## ஜோசப் பரராஜசிங்கம் தகவல்

(கொழும்பு)

**தமிழ்க்கட்சிகள் ஒன்றிணைந்து - ஏப்ரலில் நடைபெறப் போகும் நாடாளுமன்றத் தேர்தலில் - தமிழ்த்தேசிய கூட்டமைப்பு என்ற பெயரில் உதயசூரியன் சின்னத்தின் கீழ் போட்டியிட விருப்பதாக, தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட உப தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜோசப் பரராஜசிங்கம் தெரிவித்தார்.**

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது -

தமிழர்களின் ஒன்றுமையைப் பிரதிபலிக்கும் வகையில் - 'தமிழர்கள் தான் புலிகள்-புலிகள் தான் தமிழர்கள்' என்ற பிரகடனத்தை முன்வைத்து போட்டியிடுவதுடன் - வேட்பாளர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படாமல், கட்சியின் சின்னத்துக்கே வாக்களிக்கும்படி கோரவிருக்கின்றோம்.

எமது ஒற்றுமையை சர்வதேச சமூகத்துக்கு எடுத்துக்காட்டவும் - எமக்குள் பிரிவினைகள் எதுவும் கிடையாதென்பதைப் புலப்படுத்தும் வகையிலும், வேட்பாளர்களுக்கு விருப்பு வாக்குகளை அளிக்கும்படி கோராமல் சின்னத்துக்கு வாக்களிக்கும்படி தமிழ்மக்க

(12 ஆம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம் காங்கிரஸ் தனித்துப் போட்டி!

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் தனித்துப் போட்டியிடும் என்று முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

முஸ்லிம்களின் சுயநிர்ணய உரிமையை வலியுறுத்துவதற்கும், முஸ்லிம்களுக்கான அரசியலை தனியான ஒரு பாதையில் செலுத்தப்பட வேண்டியுள்ளது. அதற்காகத்தான் இந்தத் தேர்தலை பயன்படுத்தவுள்ளோம் என்று தெரிவித்தார்.

## ஜனாதிபதி சந்திரிகா தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நிறைவேற்றுக்குழு இன்று கூடுகின்றது!

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் - ஜே.வி.பியும் இணைந்து உருவாக்கிய புதிய கூட்டணியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முதலாவது நிறைவேற்றுக்குழு கூட்டம் இன்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் - ஜனாதிபதி நிச்சயம் கலந்துகொள்வாரென ஜனாதிபதி செயலகப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். அத்துடன், இந்த முன்னணிக்கு புதிதாக நியமிக்கப்பட்ட நிர்வாகிகளும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த முன்னணியின் உடன்படிக்கை கைச்சாத்திடும் நிகழ்வு பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தில் நடந்தபோது, அதில் ஜனாதிபதி கலந்துகொள்ளவில்லை (12 ஆம் பக்கம் பார்க்க)

## உயர்தரப் பரீட்சை பிற்போடப்பட்டது!

(கொழும்பு)

இந்த ஆண்டுக்கான க.பொ.த உயர்தரப் பரீட்சை எதிர்வரும் ஏப்ரல் மாத இறுதியில் நடைபெறுமென பரீட்சை ஆணையாளர் டபிள்யூ. எம்.விஜேசிறி அறிவித்தார்.

இந்தப் பரீடசை ஏப்ரல் மாதம் இரண்டாம் திகதி நடத்தப்படவிருப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், பொதுத்தேர்தல் அன்றைய தினமே நடைபெறுமென தேர்தல் திணைக்களம் அறிவித்ததையடுத்தே ஏப்ரல் மாத இறுதிக்கு பரீட்சை ஒத்திவைக்கப்பட்டது.

பரீட்சை நடைபெறும் திகதி அடுத்த வாரம் அறிவிக்கப்படும்.

## நாடாளுமன்றக் கலைப்பால் வெளிநாட்டு உதவி தடைப்படும்

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா நாடாளுமன்றத்தைக் கலைத்து தேர்தலுக்கு உத்தரவிட்டதால் இலங்கைக்கு சர்வதேச சமூகம் தர ஒப்புக்கொண்ட 4.5 பில்லியன் டொலர்கள் வழங்கப்படுவது தாமதமடையலாம் எனத் தெரியவருகிறது.

இதேவேளை அமெரிக்கா, ஜப்பான், ஐரோப்பிய ஒன்றியம் என்பன நாடாளுமன்றத்தைக் கலைத்து தேர்தலுக்கு உத்தரவிடவேண்டாம் என ஜனாதிபதிக்கு ஏற்கனவே அழுத்தத்தைக் கொடுத்திருந்தன. அதற்குப் பதிலாக பிரதமர் ரணிலுடன் அதிகாரத்தைப் பரவலாக்கி சமரச முயற்சிக்கு வருமாறும் இந்த நாடுகள் கேட்டிருந்தன.

இந்த உதவித்தொகையை வழங்க முன்வந்த நாடுகள் அந்த நிதியை முற்றுமுழுதாக நிறுத்தவில்லை. ஆனால், கொழும்பில் அரசியல் நடவடிக்கைகள் தம்மை ஏமாற்றமடையச் செய்துள்ளதாக இந்த நாடுகள் தெரிவித்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

அத்துடன் எதிர்வரும் 17 ஆம் திகதி வொஷிங்ரனில் நடைபெறவிருந்த மாநாட்டுக்கு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தலை ஒத்திவைக்க இந்தியா கோரவில்லை

### நிருபம் சென்

பொதுத்தேர்தலை பிற்போடுமாறு ஜனாதிபதியிடம் இந்தியா கோரியதாக வெளியான ஊகங்களை இந்தியா மறுத்துள்ளது.

இதுகுறித்து கொழும்பிலுள்ள இலங்கைக்கான இந்தியத் தூதரகம் கருத்துத் தெரிவித்தபோதே மேற்கண்டவாறு தெரிவித்தது.

நாடாளுமன்றத்தைக் கலைத்து தேர்தலை ஒத்திவைக்குமாறு இந்திய ஆலோசகர் கூறியதாக வெளியான ஊகங்கள் முற்றிலும் தவறானது.

ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் மத்தியஸ்தராக இந்தியா செயற்படாது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## முக்கியஸ்தர்களின் அழுத்தத்தினாலேயே ஜனாதிபதி நாடாளுமன்றத்தை கலைத்தார்!

### வெளிநாட்டு இராஜதந்திரிகள் கருத்து

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா, அவரது கட்சியிலிருந்த சிலர் கொடுத்த அழுத்தம் காரணமாகவே நாடாளுமன்றத்தைக் கலைத்தாரெனவும் அவரது விருப்பப்படி இது நடக்கவில்லையெனவும் இராஜதந்திரிகள் தெரிவித்தனர்.

இது குறித்து அவர்கள் மேலும் தெரிவித்ததாவது-

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியான தான், நாடாளுமன்றத்தைக் கலைக்க மாட்டேன் எனப் பல தடவைகள் கூறிவந்துள்ளார்.

ஆனால் சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும் - ஜே.வி.பிக்கும் (12 ஆம் பக்கம் பார்க்க)

## அரசியற் சூழ்நிலையை ஆராய்ந்தே நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது!

### அமைச்சர் டி.எம்.ஜெயரத்ன கூறுகிறார்

(கொழும்பு)

தற்போதைய அரசியல் சூழ்நிலையைத் தீவிரமாக ஆராய்ந்தபின்னரே, ஜனாதிபதி சந்திரிகா, நாடாளுமன்றத்தைக் கலைத்தார் என - தபால் மற்றும் தொலைத்தொடர்பு அமைசசராக பொறுப்பேற்றுள்ள பொதுஜன ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளர் டி.எம். ஜெயரத்ன தெரிவித்தார்.

நேற்று கேகாலையில் தர்மசிறி சேனநாயக்க ஞாபகார்த்தமாக அமைக்கப்பட்ட ஆயுர்வேத வைத்தியசாலையின் புதிய விடுதியைத் திறந்துவைத்துப் பேசியபோதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் - சமாதானத்தைக் காரணமாக வைத்து மீண்டும் இந்த நாட்டில் காலனித்துவ ஆட்சி உருவாகாமல் தடுக்கவே ஜனாதிபதி இந்தத் தீர்மா

(12 ஆம் பக்கம் பார்க்க)

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 - 2223891, 2226297
071-2348888, 071-2349999, 011-4512666, 011-2360290, 011-2360291
ail :- jaffna@expoavi.com, reservations@expoavi.com
எக்ஸ்போஎயார்
வான் வெளியில் உங்கள் நண்பன்...
EXPOAIR
your friend in the skies...

# உள்நாட்டலுவல்கள் மாகாணசபைகள் உள்ளூராட்சி அமைச்சு
# வடக்கு - கிழக்கு மாகாண சபை.

# வடக்கு – கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் (நிகொட்)

## ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது
## " ஆஅவ " கடன்இல. 1846 SRI(SF)
## கேள்வி கோரல் - இல. 27
# குடிசார் வேலைகளைப் பெறுதல்

(1) வடக்கு - கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்திக் கருத்திட்டத்தின் (NECORD) ஆகு செலவு சார்பாக பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து ("ADB") கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள குடிசார் வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் வரும்படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(2) இதன் பின்னகத்து தொழில்தருனராகக் குறிப்பிடப்படும் NECORD, கருத்திட்ட கேள்விச் சபையின் தலைவர் கருத்திட்டத்தின் கீழ் பின்வரும் ஒப்பந்தங்களுக்குத் தகுதி வாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கோருகின்றார்.

| இல. | ஒப்பந்த இனங்காட்டல் இல. | ஒப்பந்தத்தின் பெயர் | ஆகக் குறைந்த இக்டாட் பதிவு | கூறுவிலைப் பிணைப் பணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | KN/NECORD/IR/03 | கிளிநொச்சி மாவட்டத்தில் கல்மடுக்குளம் நீர்ப்பாசனத்திட்ட புனரமைப்பு - தொகுதி - 03 வாய்க்கால் அமைப்பு | M 6 | 63, 000/= |
| 02 | VA/NECORD/HS/02 | வவுனியா மாவட்டத்தில் நெடுங்கேணி சுற்றியல் கூறு மீள்நிர்மாணித்தல் தொகுதி - 01 | M 6 | 69, 000/= |
| 03 | TC/NECORD/IR/02 | திருகோணமலை மாவட்டத்தில் ஏதண்ட முறிப்பு நீர்ப்பாசனத்திட்ட புனரமைப்பு - தொகுதி - 02 வாய்க்கால் அமைப்பு | M 7 | 33, 000/= |

(3) பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தக்காரர்களின் கூறுவிலையிடல் ஏற்றுக்கொள்ளப்படும்.

(I) நிருமாணப்பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிருமாண ஒப்பந்தக்காரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தக்காரர் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(II) இலங்கை தேசிய நிருமாண ஒப்பந்தக்காரர் சங்கத்தின் (NCCASL) உறுப்பினராக ("ICTAD" உடன் M 7 க்கு மேலே பதிவு செய்தவர்களுக்கு மட்டும்) இருக்க வேண்டும்.

(III) கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக் குறைந்தது இரு ஒத்த தன்மையிலான ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடிவுறுத்தியுள்ளதுடன், கடந்த ஐந்து வருடங்களின் போது மேற்கொள்ளப்பட்ட வேலையில் செய்யப்பட்ட திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். அத்துடன், 2003 ஆடி 1 ஆம் திகதிக்குப் பின்பு தங்களைப் பதிவுசெய்த முல்லைத்தீவு, கிளிநொச்சி, அம்பாறை மாவட்டங்களிலுள்ள ஒப்பந்தக்காரர்கள் இதுபோன்ற வேலைகளை அல்லது இதற்குச் சமனான வேலைகளை ஒப்பந்தக்காரர்களாக அல்லது உப ஒப்பந்தக்காரர்களாக செய்திருத்தல் வேண்டும். இதற்கு வாடிக்கையாளர்களிடமிருந்து அல்லது உசாவலர் களிடமிருந்து சான்றுப்பத்திரங்களின் மூலம் ஆதரவளிக்கப்பட வேண்டும். இக்காலத்தின்போது, மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்றை வழங்குமாறு கேள்வி கோருபவர் வேண்டப்படுகின்றனர்.

(IV) "ICTAD" வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்றவர் போதியளவு ஒப்பந்த ஆற்றலளவைக் கொண்டிருக்க வேண்டும்.

(V) மோசடியான, அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு, அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்றிறனுக்கு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் விளங்கக்கூடாது.

(VI) ஒப்பந்த ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தக்காரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தை சமர்ப்பிக்கக்கூடியவராக இருக்க வேண்டும்.

(4) மேற்குறிப்பிடப்பட்ட அட்டவணையில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஒப்பந்தங்களுக்கு ஒப்பந்தக்காரர் கேள்வி கோர முடியும். ஏதாவது ஒப்பந்தக்காரர்களுக்கு அனுமதிக்கப்படும் ஆகக் கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை தற்போது மேற்கொள்ளும் NECORD வேலை அடங்கலாக மூன்றுக்கு மேற்படலாகாது. 01.07.2003 இற்கு பின் பதிவு செய்யப்பட்ட முல்லைத்தீவு, கிளிநொச்சி, அம்பாறை மாவட்டங்களிலுள்ள ஒப்பந்தக்காரர்கள் ஒத்த தன்மையிலான வேலைகளை ஒப்பந்தக்காரர்களாகவோ அல்லது உப ஒப்பந்தக்காரர்களாகவோ முடித்திருந்தால் எந்த ஒரு நேரத்திலும் ஏதாவது ஒப்பந்தக்காரர்களுக்கு NECORD திட்டத்தில் அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை ஒன்றாகும்.

(5) தகுதிவாய்ந்த கேள்விகோருவோர் மேலும் தகவலை திட்டப்பணிப்பாளர், 140, மின்சார நிலைய வீதி, திருகோணமலை என்னும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி: 026 -2227434, பக்ஸ்: 026 - 2227401, ஈமெயில்: necord@sltnet.lk

(6) ஒப்பந்த ஆவணங்களை மாசி மாதம் 09 இருந்து மாசி மாதம் 20, 2004 வரை முற்பகல் 9.30 இலிருந்து பிற்பகல் 3.00 வரை வேலை நாட்களில் மேற்படி ஆலுவலகத்திலிருந்து, ரூபா 1000/= மீளளிக்கப்படாத கட்டணத்தின் கொடுப்பனவு மீது கொள்வனவு செய்யப்படலாம்.

(7) கேள்வி கோருவோர் முன் தகுதிக்கு அவசியமான ஆவணமும், விலையிடப்பட்ட கேள்விகளினதும் இரண்டு பிரதிகளும் பொறி வைக்கப்பட்ட தனித்தனி உறைகளில், சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(8) அவ் வேலைக்குரிய ஒப்பந்தப் பிணைமுறியுடன் பொறிவைத்த கேள்விகள் தலைவர், NECORD, 140, மின்சார நிலைய வீதி, திருகோணமலை. மாசி மாதம் 27, 2004 பிற்பகல் 2.00 க்கு முன்னதாக கிடைக்க வேண்டும். உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். கேள்வி கோருவோர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கமுடியும்.

(9) முன்கூட்டிய கேள்விகோரல் கூட்டமொன்று மேற்படி அலுவலகத்தில் மாசி மாதம் 19 ஆம் திகதி முற்பகல் 11.30 க்கு நடைபெறும்.

(10) கேள்விகள் தயாரிப்பினால் அல்லது ஒப்படைப்பினால் கேள்வி கோருவோருக்கு ஏற்படும் ஏதாவது ஆகுசெலவுகளுக்கு, அல்லது செலவினங்களுக்கு தொழில் தருநர் பொறுப்பாகமாட்டார்.

த.லங்காநேசன்,
கேள்விச்சபை தலைவர்
வடக்கு - கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தி திட்டம் (நிகொட்)
140, மின்சார நிலைய வீதி, திருகோணமலை.

(சி-2209)

# கட்டுநாயக்க விமான விபத்து; விசாரணைகள் தீவிரம்!

(கொழும்பு)

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் கடந்த புதன்கிழமை இரவு ரஷ்யத் தயாரிப்பு சரக்கு விமானம் ஒன்று விபத்துக்குள்ளான சம்பவம் தொடர்பான விசாரணைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

விபத்துக்குள்ளான விமானத்தின் கறுப்புப் பெட்டி மற்றும் குரல் பதிவுக்கருவி என்பன ரஷ்யாவுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. இந்தக் கருவிகள் தொடர்பான பரிசோதனைகளை மேற்கொள்வதற்கான வசதிகள் இலங்கையில் இல்லாத காரணத்தால், மேலதிக விசாரணைக்காக இவை ரஷ்யாவுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

இந்த விமானம் அவசரமாகத் தரையிறக்கப்பட்டதற்கான காரணத்தை கண்டறிவதற்காக - 11 உறுப்பினர்ளைக் கொண்ட விசாரணைக்குழு ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. இந்தக்குழு - விமானிக்கும், விமான நிலைய கட்டுப்பாட்டு அறைக்கும் இடையில் தொடர்புகள் சீராக இருந்ததா என்பது குறித்து விசாரித்து வருகிறது.

சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் உதவிப்பணிப்பாளர் எச்.சுபசிங்க தலைமையிலான விசாரணைக்குழுவில் விமானப் பொறியியலாளர்கள் மற்றும் கட்டுப்பாட்டு நிலைய அதிகாரிகள் பலரும் இடம்பெற்றுள்ளனர்.

விபத்துக்குள்ளான விமானத்தில் முதலாம் இலக்க, இரண்டாம் இலக்க இயந்திரங்கள் முறறாகச் சேதமடைந்தன. ரஷ்யாவில் தயாரிக்கப்பட்ட ஐ.சி 18 - டெல்ரா ரகத்தைச் சேர்ந்த இந்த விமானத்தை ரஷ்ய விமானி ஒருவரே ஓட்டிவந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# திடீர் தேர்தலுக்குச் செல்லாது சமாதானத்தை முன்னெடுங்கள்

## வாசுதேவ நாணயக்கார கோரிக்கை

அவசரமாக தேர்தல் ஒன்றை நடத்துவதன்மூலம், சமாதானத்தினை ஏற்படுத்துவதற்காக மக்கள் வழங்கிய ஆணை அவமதிக்கப்படும் என, ஜயநாயக இடதுசாரி முன்னணியின் தேசிய அமைப்பாளர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

அவசர தேர்தல் ஒன்றை நடத்துவதன் மூலம், பாதகமான விளைவுகளை எதிர்நோக்க வேண்டும். இந்த விடயம் குறித்து அரசியல் கட்சிகளும், பொது அமைப்புக்களும் இணைந்து மக்களை தெளிவுபடுத்தும் நோக்கில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து கருத்துத்தெரிவிக்கையில் -

பேச்சுவார்த்தை நடத்தி இந்த சமாதானத்தை உறுதிப்படுத்துமாறு ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் வேண்டுகோள் விடுக்கிறோம். அதேபோல், திடீர் தேர்தல் ஒன்றுக்குச் செல்லாமல், சமாதானத்தினை முன்னெடுத்து செல்லுங்கள்.

நீங்கள் செயற்படாதுவிட்டால் வேறு வழியில் நாம் உங்களுடன் முகம்கொடுக்க நேரிடும். நாட்டில் பெரும்பான்மை மக்கள் தேர்தல் ஒன்றை விரும்பவில்லை.

நாம் தேர்தலை எதிர்க்கவில்லை. எனினும், அவசரமாக தேர்தல் ஒன்றை நடத்துவது எவருக்கும் நன்மை கிடைக்கப் போவதில்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

## மூன்று அமைச்சுக்களை பொறுப்பேற்றதன் மூலம்

# பிரபாகரனுக்கு ஈழத்தை வழங்கும் பிரதமர் ரணிலின் திட்டம் முறியடிப்பு!

## மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு



ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பாதுகாப்பு அமைச்சு உள்ளிட்ட மூன்று முக்கிய அமைச்சுக்களைப் பொறுப்பேற்றதன் மூலமாக, புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்கு, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஈழம் இராஜ்யத்தை வழங்கும் திட்டத்திற்கு முடிவு கட்டப்பட்டதாக - முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பேரணி ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் தொடர்ந்து பேசுகையில்,

இலங்கையை புதியதொரு வெளிநாட்டு காலனித்துவ நாடாக மாற்றுவதற்கு ஐ.தே.மு அரசாங்கம் திட்டமிட்டிருந்தது.

இலங்கையில் வெளிநாட்டவர்கள் காணிகளை வாங்கக்கூடிய வகையிலான சட்டமூலம் ஒன்று அண்மையில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

இதையடுத்து வெளிநாட்டவர்கள் தென்பகுதியில் நிலங்களை குத்தகைக்குப் பெற்று, சுற்றுலா விடுதிகளை அமைத்து வருகின்றார்கள்.

எதிர்காலத்தில் இலங்கை பிரஜைகள் இந்த வெளிநாட்டு நிறுவனங்களில் தொழிலாளர்களாக இருக்கவேண்டி ஏற்படும்.

மூன்று அமைச்சுக்களை சரியான தருணத்தில் பொறுப்பேற்ற ஜனாதிபதி சந்திரிகா - தேசவிரோத நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்தினார்.

நாட்டின் முக்கிய பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் வரை - குறுகிய காலத்துக்கேனும் தேசிய அரசாங்கம் ஒன்றை அமைக்க முன்வருமாறு பிரதமருக்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்திருந்தார்.

ஆனால், மூன்று அமைச்சுக்களையும் ஜனாதிபதி மீளத்தரவேண்டும் என்று பிரதமர் கட்டாயப்படுத்தினார்.

எந்தவொரு அமைச்சையும் பொறுப்பேற்றுக்கொள்ளும் அதிகாரத்தை ஜனாதிபதிக்கு வழங்கும் சட்டத்தை 1978 ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சியே நிறைவேற்றியது. இதனால், ஜனாதிபதியின் முடிவு குறித்து சச்சரவு செய்ய பிரதமருக்கு எந்தவொரு உரிமையும் இல்லை.

இந்த நிலையிலேயே, அரசியல் கூட்டணி ஒன்றை அமைக்க ஜனாதிபதி முடிவுசெய்தார். இதன் விளைவாக, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உருவாக்கப்பட்டிருக்கிறது.

இந்தக் கூட்டணியில் ஆறு அரசியற்கட்சிகள் இணைந்திருக்கின்றன. லங்கா சமசமாஜக் கட்சியும், கம்யூனிஸ்ட் கட்சியும் இந்தக் கூட்டணியில் விரைவில் இணைந்து கொள்ளும்.

புதிய கூட்டணியில் அமைச்சர் ரவூப் ஹக்கீமுடன் முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் இணைந்துகொள்ளலாம். ஆனால், தொண்டமான் இணைவாரா என்பது சந்தேகமே. ஏனெனில், அவர் அடுத்துவரும் தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணியுடன் இணைந்து போட்டியிடவுள்ளார்.

அடுத்த தேர்தல் தமிழ்த்தேசிய கூட்டமைப்புக்கு மிகவும் சிக்கலானதாக இருக்கும். டக்ளஸ் தேவானந்தாவின் ஈ.பி.டி.பி - விரைவில் எமது கூட்டணியுடன் இணைந்து கொள்ளும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ மேலும் தெரிவித்தார்.

## சிறுவர் துஷ்பிரயோகம்; நெதர்லாந்து பிரஜை கைது!

(கொழும்பு)

சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பாக நெதர்லாந்து நாட்டைச் சேர்ந்த சந்தேக நபர் ஒருவரை கொழும்பில் வைத்து தேசிய சிறுவர் பாதுகாப்புப் பொலிஸ் பிரிவினர் கைதுசெய்தனர்.

இந்தச் சந்தேகநபர் நெதர்லாந்து நாட்டினால் நீர்கொழும்பில் நடத்தப்படும் சிறுவர் பாதுகாப்புத் தொடர்பான அரசசார்பற்ற நிறுவனம் ஒன்றின் ஆணையாளராகப் பணிபுரிந்து வருகிறார்.

இவரைக் கைதுசெய்த பொலிஸார், இவரிடமிருந்த கணினியை சோதனைசெய்தபோது, அதில் 340 சிறுவர்களின் பெயர் மற்றும் விபரங்கள் பதிவுசெய்து வைக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

இந்தச் சந்தேக நபரை பொலிஸார் கொழும்பு நீதிமன்றில் ஆஜர் செய்தபோது எதிர்வரும் 13 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி சரோஜினி குசல விஜயவர்த்தன உத்தரவிட்டார்.

# புலிகளின் இடைக்கால யோசனை; எந்தக் காலத்திலும் ஏற்கமுடியாது!

## ஜே.வி.பி. தலைவர் சோமவன்ச அமரசிங்க

விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்கால நிர்வாக சபை யோசனையை, எந்தக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ள முடியாது. இவ்வாறு, ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்தார்.

சுயாதீன தொலைக்காட்சியில் இடம்பெற்ற நேர்காணல் நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்கால நிர்வாக சபை யோசனை தொடர்பாக எந்தவொரு பேச்சுவார்த்தையையும் நடத்தமுடியாது. இது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட யோசனையும் அல்ல.



விடுதலைப் புலிகள் கடந்த ஏப்ரல் மாதம் சமாதான முயற்சியில் இருந்து ஒதுங்கிக்கொண்ட பின்னர் சமாதான முயற்சிகள் செயலிழந்து போனது.

சுதந்திரக்கட்சியும், ஜே.வி.பியும் ஏற்படுத்திக் கொண்ட கூட்டமைப்பு- விடுதலைப் புலிகளுக்கு ஜனநாயகத்தையும், சமத்துவத்தையுமே வழங்கமுடியும்.

வரலாற்றிலே முதல் தடவையாக சில விடயங்களிலே இணக்கம் காணப்படவில்லை என்று ஒப்புக்கொள்ளப்பட்டு ஒரு கட்சியுடன் கூட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்திக்கொண்டுள்ளோம்.

சுதந்திரக் கட்சியால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அதிகாரப் பரவாக்கல் யோசனையை ஜே.வி.பி ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் சோமவன்ச அமரசிங்க மேலும் தெரிவித்தார்.

# அடுத்த விவசாயத்துறை அமைச்சர் ஜே.வி.பியின் விமல் வீரவன்சவாம்!

## அநுரா பண்டாரநாயக்க கூறுகிறார்



பொதுஜன ஐக்கிய முன்னணியால் அடுத்து அமைக்கப்படவுள்ள அரசாங்கத்தில் ஜே.வி.பியின் விமல் வீரவன்ச விவசாயத்துறை அமைச்சராக நியமிக்கப்படுவாரென, ஜனாதிபதியின் சகோதரரும், பொதுஜன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரா பண்டாரநாயக்க தெரிவித்தார்.

அவரது வாசஸ்தலமான றோஸ்மீட் பிளேசில் நேற்றுமுன்தினம் நடந்த நிகழ்வொன்றில் உரையாற்றுகையிலேயே அனுரா பண்டாரநாயக்க இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது -

விமல் வீரவன்சவுக்கு விவசாய அமைச்சுப் பதவி கிடைப்பதற்கு நான் கடுமையாகப் பாடுபடுவேன். இந்த நாட்டின் விவசாயத் துறையை விமல் வீரவன்ச நிச்சயம் மாற்றியமைப்பார் என்பது எனக்குத் தெரியும்.

அத்துடன், அடுத்த பொதுஜன ஐக்கிய முன்னணியின் அரசில் மூன்று முக்கிய அமைச்சுக்கள் ஜே.வி.பியினருக்கு வழங்கப்படும் இந்த நிகழ்வில் விமல் எமது எதிர்கால அரசில் ஒரு அமைச்சர் என அநுரா வெளிப்படையாகவே கூறினார்.

அநுரா பண்டாரநாயக்கவின் இந்தக் கருத்துக்களை சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் கடுமையாக விமர்சித்துள்ளனர்.

அத்துடன், இது தொடர்பாக அடுத்து நடைபெறவுள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுக் கூட்டத்தில் ஜனாதிபதி சந்திரிகாவிடம் முறையிடவுள்ளதாகவும் அவர்கள் தீர்மானித்துள்ளனனர்.

## பத்து கோடி ரூபாவுக்கு

# ஐ.தே. முன்னணி அமைச்சர் ஒருவர் அமெரிக்காவில் வீடு கொள்வனவு!

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தில் அங்கம்வகிக்கும் அமைச்சர் ஒருவர் அமெரிக்காவில் 10 கோடி ரூபா பெறுமதியான வீடொன்றைக் கொள்ளவனவு செய்திருப்பதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டியிருக்கின்றன.

இது குறித்து எதிர்க்கட்சிகள் தகவல் வெளியிடுகையில்-

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் அமைச்சராக இருந்து, பின்னர் ஐக்கிய தேசிய முன்னணியில் இவர் இணைந்து அமைச்சராகப் பதவிவகித்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இவர் அண்மையில் காலியில் இரண்டு வீடுகளை வாங்கியிருப்பதாக எதிர்க்கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. மீன்ரின் உற்பத்தித் தொழிற்சாலை ஒன்றை இலங்கையில் அமைப்பதற்கு முன்வந்த ரஷ்ய நிறுவனம் ஒன்றிடமிருந்து இந்த அமைச்சர் 3 கோடி ரூபாவை தரகுப் பணமாகக் கோரியுள்ளதாகவும் தெரிவித்தார்.

# இந்திய அணியை தோற்கடித்ததன் மூலமாக வி.பி. கிண்ணத்தை வென்றது அவுஸ்ரேலியா




அவுஸ்ரேலியாவில் நடைபெற்றுவந்த வி.பி.கிண்ணத்திற்கான நேற்றைய இரண்டாவது, இறுதியாட்டத்தில், இந்தியாவை 208 ஓட்டங்களால் அவுஸ்ரேலியா தோற்கடித்தது.

நேற்றையதினம் சிட்னியில் பகல் இரவு ஆட்டமாக நடந்த இந்தப் போட்டியில், நாணயச் சுழற்சியில் வென்ற அவுஸ்ரேலியா முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி துடுப்பெடுத்தாடிய அவுஸ்ரேலிய அணி வீரர்கள் இந்தியப் பந்துவீச்சாளர்களின் பந்துவீச்சைச் சிதறடித்து ஓட்டங்களை ஆரம்பம் முதலே குவிக்கத் தொடங்கினர். 50 ஓவர்கள் நிறைவில் அவுஸ்ரேலியா 5 விக்கெட்டுக்களை இழந்து 359 என்ற பெரியதொரு இலக்கை எட்டியது.

அவுஸ்ரேலிய அணியின் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் கில்கிறிஸ்ட் 29 ஓட்டங்களுடன், அணித்தலைவர் பொண்டிங் 4 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தாலும், மற்றையவர்கள் சிறப்பான முறையில் ஓட்டங்களைக் குவித்தனர். இதில், மத்யூ ஹைடன் 122 பந்துகளை எதிர்கொண்டு, 11 பவுண்டரிகள், 3 சிக்ஸர்கள் அடங்கலாக 126 ஓட்டங்களைப் பெற்றார். சர்வதேச ஒருநாள் போட்டிகளில் ஹைடனின் நான்காவது சதம் இதுவாகும்.

மார்ட்டின் இந்த தொடரில் சரியாக விளையாடாத போதிலும், நேற்றைய போட்டியில் சிறப்பாக விளையாடி 4 பவுண்டரிகள் அடங்கலாக 67 ஓட்டங்களைப் பெற்றார்.

அடுத்து, சைமன் 39 பந்துகளை எதிர்கொண்டு ஏழு பவுண்டரிகள் மூன்று சிக்ஸர்கள் அடங்கலாக 66 ஓட்டங்களைப் பெற்றார். கிளார்க் இருபது பந்துகளை எதிர்கொண்டு மூன்று பவுண்டரிகள் அடங்கலாக 33 ஓட்டங்களையும், ஹட்ரிச் நான்கு பந்துகளை எதிர்கொண்டு இரண்டு பவுண்டரிகள் அடங்கலாக 11 ஓட்டங்களையும் பெற்றனர்.

நேற்றைய போட்டியில் அவுஸ்ரேலிய அணி சார்பில் மொத்தமாக 30 பவுண்டரிகளும், ஆறு சிக்ஸர்களும் பெறப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

பந்து வீச்சில் பதான், நெஹ்ரா இருவரும் தலா 2 விக்கெட்டுக்களையும், சச்சின் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

359 என்ற பெரியதொரு இலக்குடன் ஆடத்தொடங்கிய இந்தியத் துடுப்பாட்ட வீரர்கள் அவுஸ்ரேலிய பந்துவீச்சாளர்களின் பந்துகளுக்கு முகம்கொடுக்க முடியாமல் திணறினர்.

இறுதியில் 33.2 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 151 ஓட்டங்களையே இந்தியாவால் பெறமுடிந்தது. இந்திய அணி சார்பில் இர்பான் பதான் - 30, சச்சின் - 27, முரளிகார்த்திக் - 23, பதானி - 18, நெஹ்ரா - 14 ஆகியோர் கூடுதலான ஓட்டங்களைப் பெற்றனர்.

அணித்தலைவர் கங்கூலி - 3, லக்ஸ்மன் - 5, யுவராஜ் சிங் - 4, பாலாஜி - 2, ஆகியோர் குறைந்தளவு ஓட்டங்களைப் பெற்றனர். கடந்த 120 போட்டிகளில் தொடர்ச்சியாக ஓட்டங்களைப் பெற்றுவந்த ட்ராவிட் நேற்றைய போட்டியில் ஓட்டமெதுவும் பெறாமல் ஆட்டமிழந்தமையும் குறிப்பிடத்தக்கது.

பந்து வீச்சில், ஜிலெஸ்பி, பிரெட்லீ, வில்லியம்ஸ் மற்றும் ஹாவி ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

நேற்றைய ஆட்டத்தின் நாயகனாக மத்யூ ஹைடனும், இந்தத் தொடரில் 498 ஓட்டங்களைக் குவித்த கில்கிறிஸ்ட் ஆட்டத்தின் தொடர்நாயகனாகவும் தெரிவுசெய்யப்பட்டனர்.

## மகளிருக்கான விளையாட்டு விழா

(வண்ணை)

யாழ்.மாவட்ட விளையாட்டுத்துறை ஆதரவில் யாழ்.மாவட்ட அரசியற்துறை மகளிர் பிரிவு நடாத்தும் மகளிருக்கான விளையாட்டு விழா எதிர்வரும் 9, 10 ஆம் திகதிகளில் பல்கலைக்கழக விளையாட்டு அரங்கில் இடம்பெறவுள்ளது.

தினமும் தாயக நேரம் காலை 9 மணி முதல் மைதான நிகழ்வுகள் ஆரம்பமாகும். பொதுச்சுடரேற்றல், தேசியக்கொடி ஏற்றல், அகவணக்கம் என்பவற்றைத் தொடர்ந்து விளையாட்டுக்கள் ஆரம்பமாகும். இதற்கென கோட்டச் செயலகங்களில் இருந்து விசேட போக்குவரத்து ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (111)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

நாவற்குழி மகாவித்தியாலய இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டிகள் நாளை செவ்வாய்க்கிழமை பி.ப. 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் வசந்தாதேவி மேகலிங்கம் தலைமையில் நடைபெறும். இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக பொருளியல் துறைத் தலைவர் சிவநாதன் கலந்துகொள்வார். (108)

## கரப்பந்தாட்ட இறுதிப்போட்டி

(யாழ்ப்பாணம்)

அரியாலை ஐக்கிய கழகம் நடத்தும் கனகரத்தினம் ஞாபகார்த்த கிண்ணத்திற்கான கரப்பந்தாட்ட இறுதிப்போட்டி நாளை பி.ப. 3.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

அரியாலை சனசமூக நிலைய ஆடுகளத்தில் நடைபெறும் இந்தப்போட்டிக்கு எஸ். செல்வராசா தலைமை வகிப்பார். இந்தப் போட்டியில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது.

## விளையாட்டு

## பாகிஸ்தான் பயிற்சி அணியில் வக்கார் இடம்பெறவில்லை!

இந்திய அணி 14 வருடங்களுக்குப் பின்னர் பாகிஸ்தானில் அடுத்த மாதம் சுற்றுப் பயணம் செய்து விளையாடவுள்ளது. இந்தத் தொடருக்கான 22 பேர்கொண்ட பயிற்சி அணியை பாகிஸ்தான் நேற்று அறிவித்தது. இதில் வேகப்பந்துவீச்சாளர் வக்கார் யூனுஸ் பெயர் இடம்பெறவில்லை.

இவர் உலகக் கோப்பைக்குப் பிறகு அந்த அணியிலிருந்து தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டு வருகிறார். நியூசிலாந்துக்கு எதிரான தொடரில் ஆடாத சக்லைன் முஸ்ரக், அசார் முகமட் ஆகியோர் சேர்க்கப்பட்டுள்ளனர்.

பயிற்சி அணியின் விபரம் வருமாறு-

இன்சாம் - உல்-ஹக் (கப்டன்) இம்ரான் பர்கத், தபிக் உமர், யாசீர் அகமது, யூசுப் யுகானா, அசிம்கமால், மிசாப் உல்ஹக் கான், பாசில் இக்பால், அப்துல்ரசாக், சோயிப் மாலிக், சக்லைன் முஸ்தாக், டேனிஸ்கனிரா, மொயின்கான் அக்தர், முகமது உமர், சதாம் கபீர்.

## தென்னாபிரிக்காவுடனான போட்டியிலும் நதன் அஸ்ரிஸ் விளையாடமாட்டார்



நியூசிலாந்து அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரர்களில் ஒருவரான நதன் அஸ்ரில் இந்திய சுற்றுப் பயணத்தின்போது, கணுக்காலில் காயமடைந்தார். இதனால், பாகிஸ்தானுக்கு எதிரான தொடரிலும் ஆடாமல் இருந்தார்.

இந்த நிலையில், தென்னாபிரிக்க அணி நியூசிலாந்தில் சுற்றுப் பயணம் செய்து 3 டெஸ்ட் மற்றும் 6 ஒருநாள் போட்டிகளில் விளையாடவுள்ளது. இந்தத் தொடரிலும் அவர் விளையாடுவது சந்தேகம்தான். இன்னும் அவர் முழு உடல்தகுதி பெறவில்லை.

இதேவேளை, அடுத்தவாரம் ஆரம்பமாகும் இரு அணிகளுக்கிடையேயான போட்டி விவரம் வருமாறு:

முதல் ஒரு நாள்போட்டி எதிர்வரும் 13 ஆம் திகதி ஒக்லாந்திலும், 2 ஆவது போட்டி 17 ஆம் திகதி கிறிஸ்ட்சர்ச்சிலும், 3 ஆவது போட்டி 20 ஆம் திகதி வெலிங்டனிலும், 4 ஆவது போட்டி 24 ஆம் திகதி டுனிடனிலும், 5 ஆவது போட்டி 28 ஆம் திகதி ஒக்லாந்திலும், கடைசி ஒருநாள் போட்டி மார்ச் மாதம் 2 ஆம் திகதி நேப்பியரிலும் நடைபெறும்.

இதனைத் தொடர்ந்து 3 டெஸ்ட் போட்டி நடைபெறுகிறது. முதல் டெஸ்ட் போட்டி 10 ஆம் திகதி ஹமில்டனில் தொடங்குகிறது.

## விளையாட்டுத்துறை ஏற்பாட்டில் வலைப்பந்தாட்டப் பயிற்சி!

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விளையாட்டுத்துறையின் ஏற்பாட்டில் இலங்கை வலைப்பந்தாட்ட சம்மேளனத்தினர் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த வீராங்கனைகளுக்கான பயிற்சிகள் கடந்த 5 ஆம் திகதி யாழ்.பல்கலைக்கழக மைதானத்தில் ஆரம்பமாகியது.

ஆரம்ப நிகழ்வின் பொதுச்சுடரினை யாழ்.மாவட்ட பயிற்றுநர் ரூபசிங்கமும், யாழ்.மாவட்ட விளையாட்டு அதிகாரி றொகான் ராஜசிங்கமும் ஏற்றினர். தமிழீழத் தேசியக்கொடியினை தமிழீழ விளையாட்டுத்துறையின் மகளிர் பொறுப்பாளர் சுரபி ஏற்றினார். சிறப்புரையை யாழ்.மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் செல்வி கயல்விழி நிகழ்த்தினார்.

மொத்தம் 60 வீராங்கனைகள் பங்குகொள்ளும் இந்தப் பயிற்சிநெறி 05 நாட்கள் தொடர்ச்சியாக நடைபெறும்.

# சிறையில் 62 ஆயிரம் பேரை சந்தித்ததனால் வைகோ கின்னஸ் சாதனையில் இடம்பிடிப்பு!

(வேலூர்)

ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ, கடந்த 2002 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 11 ஆம் திகதி 'பொடா' சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு வேலூர் சிறையில் அடைக்கப்பட்டார். நேற்றுமுன்தினம் காலை அவர் பிணையில் விடுதலை செய்யப்பட்டார். மொத்தம் 578 நாட்கள் அவர் சிறையில் இருந்துள்ளார்.

அவரை தினமும் ஏராளமான பார்வையாளர்கள் சென்று சந்தித்துள்ளனர். மொத்தம் 62 ஆயிரம் பேர் அவரை சந்தித்துப் பேசியுள்ளனர். இது கின்னஸ் சாதனையாகக் கருதப்படுகிறது. மத்திய அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் 3 முறையும், தி.மு.க. தலைவர் கருணாநிதி 2 முறையும், வைகோவை சந்தித்தனர்.

அகில இந்திய பா.ஜனதா தலைவர் வெங்கையா நாயுடு, செயலாளர் இல.கணேசன், மத்திய அமைச்சர்கள் பொன்.ராதாகிருஷ்ணன், திருநாவுக்கரசர், தமிழக பா.ஜனதா கட்சியை சேர்ந்த சி.பி.ராதாகிருஷ்ணன், பா.ம.க.நிறுவுனர் டாக்டர் ராமதாஸ், திராவிட கழகத் தலைவர் வீரமணி, இந்திய கம்யூனிஸ்ட் செயலாளர் வரதராஜன், தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன், மக்கள் தமிழ் தேசம் தலைவர் கண்ணப்பன் .ஆகியோர் வைகோவை சந்தித்தனர்.

பூந்தமல்லி, நாகபட்டினம், மயிலாடுதுறை ஆகிய நீதிமன்றங்களுக்கு வைகோ 100 முறை சென்று வந்துள்ளார். இதற்காக மொத்தம் 32 ஆயிரம் கிலோமீற்றர் தூரம் பயணம் செய்துள்ளார். சிறையில் இருந்து அதிக அறிக்கைகள் வெளியிட்டது, அதிகம் பேருககு கடிதம் எழுதியது ஆகியவற்றிலும் வைகோ சாதனை படைத்துள்ளார்.



சிறையில் இருந்த வைகோவுக்கு வெளியில் இருந்து உதவி செய்துவந்தவர் ம.தி.மு.க. ஆலோசனை குழு உறுப்பினர் சுப்பிரமணி. வைகோவை காணவரும் பார்வையாளர்கள் பட்டியலை சிறை அதிகாரிகளிடம் கொடுத்து முன்அனுமதி பெறுவது, அவர்கள் சிறையில் இருந்து வெளிவரும்வரை காத்திருப்பது, முக்கிய தலைவர்கள் வரும்போது, முன் ஏற்பாடு செய்வது போன்ற பணியில் ஈடுபட்டுவந்தார்.

வைகோவுக்கு தினமும் அதிகாலையில் பத்திரிகைகளை அனுப்பி வைப்பது, வைகோ நீதிமன்றம் செல்லும்போது, அதிகாலை காத்து நின்று சந்திப்பது, திரும்பும்போது அவரிடம் தகவலைப் பெற்றுச்செல்வது போன்றவை இவரது வழக்கமான பணி. இவர் கைதாகாமலேயே 578 நாளும் சிறையில் இருந்துள்ளார்.

# புலிகளின் தீவிர ஆதரவாளர் வைகோ; பிணையை இரத்துசெய்ய வேண்டும்!

## மதுரை கியூ பிரிவு பொலிஸ் நீதிமன்றில் மனுத்தாக்கல்

(சென்னை)

ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோவுக்கு அளிக்கப்பட்ட பிணை மனுவை இரத்துச் செய்யக்கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் மதுரை கியூ பிரிவு பொலிஸார் மேன்முறையீடு மனுவைத் தாக்கல் செய்துள்ளனர்.

வைகோவுக்கு பூந்தமல்லி பொடா நீதிமன்றம் கடந்த 3 ஆம் திகதி பிணை வழங்கியுள்ளது. பொடா சிறப்பு நீதிமன்ற நீதிபதியின் உத்தரவுச் சட்டத்துக்கு இந்தப் பிணை முரணானது. வைகோ மீதான குற்றத்தின் தன்மையையும், கடுமையையும் கருத்தில்கொள்ள பொடா நீதிபதி தவறிவிட்டார்.

ஏற்கனவே இலங்கைக்கு வைகோ இரகசியமாகச் சென்று பிரபாகரனைச் சந்தித்து வந்துள்ளார். எனவே, அவர் நீதியின் பிடியில் இருந்து தப்பிவிடுவதற்கான வாய்ப்பை ஒதுக்கிவிடமுடியாது. இதனை பொடா நீதிபதி கருத்தில் கொள்ளவில்லை. தடைசெய்யப்பட்ட விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தீவிர ஆதரவாளர் வைகோ என்பதை பொடா நீதிபதி கவனிக்கத் தவறிவிட்டார். மேலும், புலிகள் இயக்கம் ஒரு சட்டவிரோத அமைப்பு என்றும், சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தின் கீழ் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தத்தடை உத்தரவு இன்னும் அமுலில் இருக்கிறது.

புலிகள் இயக்கத்தின் தீவிர ஆதரவாளர் மட்டுமல்லாமல் எதிர்காலத்திலும் தொடர்ந்து ஆதரிப்பேன் என்று வைகோ கூறியுள்ளார். இதனை பொடா நீதிபதி கவனிக்கத்தவறிவிட்டார். தீவிரவாத நடவடிக்கைகளில் ஈடுபடும் ஒரு இயக்கத்தை எம்.பியாக இருந்துகொண்டு ஆதரிப்பது என்பது அவர் எடுத்துக்



கொண்ட உறுதிமொழிக்கு எதிரானது.

எனவே - கடந்த 3 ஆம் திகதி வைகோவுக்கு பிணை அளித்து பொடா சிறப்பு நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை இரத்துச்செய்ய வேண்டும். பொடா நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவுக்குத் தடைவிதிக்க வேண்டும் எனவும் அந்த மனுவில் கூறப்பட்டுள்ளது.

இந்த மனுவை நீதிபதிகளான சிர்புர்கர், இப் ராகிம் கலிபுல்லா ஆகியோர் அடங்கிய அமர்வு நீதிமன்றம் முன் இன்று விசாரணைக்கு வருகிறது.



பட்டப்படிப்புக் கல்லூரியின் வெள்ளி விழா நிகழ்வு நேற்று யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற போது - பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை உரையாற்றுவதைப் படத்தில் காணலாம்.

# தமிழ் அடையாளத்தைக் காக்கும்வகையில் நல்ல தமிழ் பெயர்களைச் சூட்டுங்கள்

## புதுவை இரத்தினதுரை உரை

எமது தமிழ் அடையாளத்தினைப் பேணக்கூடிய வகையில் பிள்ளைகளுக்கு நல்ல தமிழ்ப் பெயர்களைச் சூட்டுங்கள் எனத் தமிழீழ கலைபண்பாட்டுக்கழுப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை தெரிவித்தார்.

கனடாவில் புலம்பெயர் தமிழர்களின் அமைப்பான 'சிலம்பத்தின்' ஏற்பாட்டில் நேற்று நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற - தமது பிள்ளைகளுக்குத் தமிழ்ப் பெயர்சூட்டிய பெற்றோர் கௌரவிப்பு விழா நிகழ்வில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்-

தமிழீழத்தின் தலைசிறந்த நகரமாக விளங்கும் யாழ்ப்பாணத்தில், தமிழ்ப்பெயர்களைப் தமது பிள்ளைகளுக்குச் சூட்டியோர் கௌரவிக்கப்படும் அளவிற்கு தமிழ்ப்பெயர் இடும் வழக்கம் அற்றுப்போயுள்ளமை கவலையளிக்கிறது.

கனடா வாழ் தமிழர்களின் உணர்வின் வெளிப்படாக அமைந்த 'சிலம்பம்' அமைப்பினர், மிகவும் கஷ்டப்பட்டு தாம் சேகரித்த பணத்தைக்கொண்டு இத்தகைய சேவைகளில் ஈடுபட்டு வருகின்றமை மிகவும் வரவேற்கத்தக்கது.

விடுதலைப் போராட்டத்திற்குப் பல வழிகளாலும் உதவுபவர்களாக இந்த புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் உள்ளார்கள். ஒரு காலத்தில் நாம்கூட இவ்வாறு புலம்பெயர்ந்து செல்பவர்களை ஆதரிக்கவில்லை. எனினும், தற்போது அவர்களின் பணி வரவேற்கத்தக்க வகையில் அமைந்திருக்கின்றமை சிறப்பிற்குரியதாகும்.

எனினும், அங்கு சென்றும் சில தமிழர்கள் இங்குள்ள கீழ்த்தரமான சாதிமுறை மற்றும் சில பழக்கவழக்கங்களைப் பேணிவருவது கவலைக்குரியதாகும்.

அங்கு சில தொலைக்காட்சிச் சேவைகள், பத்திரிகைகள் வெளிவருகின்றன. அவை மக்கள சேவைக்காக வெளிவருவதாகக் கருதினேன். அங்கு சென்று பார்த்த பின்னர்தான், அவை மிகுந்த வருமானத்தைப் பெறும் நோக்காகக்கொண்டு செயற்பட்டுவருகின்றது என்பதை. இவை அத்தகைய நிலையிலிருந்து மாறி உண்மையான தமிழ்பபற்றுடன் செயற்படவேண்டும்.

இன்றுநாம் தமிழ்ப் பண்பாட்டுக்குரிய உணவையோ, உடைகளையோ பயன்படுத்துவதில்லை. இந்த நிலையில், எமது பெயராவது தமிழ்ப் பண்பாடடுக்குரியதாகத் தூயதமிழ் அர்த்தம் கொண்டதாக விளங்கவேண்டும். அப்போதுதான் எமது முகவரி அதாவது, நாம் தமிழர் என்ற அடையாளத்தைதப் பாதுகாக்க முடியும்.



சிறிதுகாலம் சென்றால், இலங்கையின் வடக்கு - கிழக்கில் வாழ்ந்தவர்கள் எந்த இனத்தவர் என அடையாளப்படுத்தமுடியாத வகையில், பெயர்கள் பல்வேறு நாட்டுப் பெயர்களையும் உள்ளடக்கிய வகையில் சூட்டப்படுகிறது.

இந்த விடயத்தில் எண்சோதிடங்களின் செயலும் தவறிழைக்கின்றதுபோல் தென்படுகின்றது. அதாவது, அவர்கள் குறிப்பிடும் சில எழுத்துக்களில் தமிழ்ப் பெயர்களைத் தேடிப்பெறமுடியாத நிலையில்கூட, சிலர் அத்தகைய வாயில் நுழைய முடியாத பெயர்களைப் பிள்ளைகளுக்குச் சூட்டுகின்றனர். அவ்வாறிருந்தால் இந்த விடயத்தில் அவர்களும் கவனமாச் செயற்பட்டு, தமிழ்ப்பெயர்கள் சூட்ட வழிசெய்யவேண்டும் என்றார்.

பேராசிரியர் சண்முகதாஸ் தனது உரையில் - இன்று இலங்கையில் தமிழ் பிள்ளைகளின் எண்ணிக்கை குறைந்து செல்கிறது. இதற்குப் பிரதான காரணம் படிப்பு, தொழில வாய்ப்பின்மை போன்றவற்றால் திருமணவயதைத் தாண்டியும் பலர் திருமணத்தில் நாட்டமற்றிருப்பதாகும்.

இன்று மருத்துவபீடத்தினை எடுத்துக்கொண்டால்- அங்கு கல்வி கற்பவர்களில் ஏராளமானோர் திருமணம் புரிந்துவிட்டே கல்விகற்கிறார்கள்.

இவ்வாறு அனைத்து இளைஞர், யுவதிகளும் உரிய பருவத்தில் திருமணம் புரிந்து, எமது நாட்டிற்கு அரிய செல்வங்களாகிய பிள்ளைச் செல்வங்களைப் பெற்றுத் தரவேண்டும். இன்று உலகில் உறுதியாக நிமிர்ந்து நிற்கும் மொழியாக விளங்குவது தமிழ்மொழி. இதற்கு பிரதான காரணம் - தமிழ்மொழியின் உறுதியான தன்மையும், தமிழ்ப் பற்றாளர்களின் சேவையும் என்றார். (ப)

# கள் எடுத்து வந்த நபரை இனந்தெரியாதோர் தாக்கினர்

## புன்னாலைக்கட்டுவன் சந்தியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

புன்னாலைக்கட்டுவன் பகுதியில் கள் எடுத்துச்சென்ற நபர் - இனந்தெரியாத நபர்களின் வாள்வெட்டுக்கு இலக்காகி, காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் - நேற்றுமுன் தினம் புன்னாலைக்கட்டுவன் சந்தியில் இடம்பெற்றது.

சம்பவதினத்தின்போது, ஈவினையைச் சேர்ந்த அருளன் ஜெயம் (வயது 45) என்பவர் காயமடைந்தார். இந்த சம்பவம் தொடர்பாகத் தெரியவருவதாவது -

புன்னாலைக்கட்டுவன் சந்தியை நோக்கி பை ஒன்றினுள் மறைத்து, கள் எடுத்து வந்த இவரை வழி மறித்த இனந்தெரியாத கோஷ்டியொன்று கடுமையாகத் தாக்கியுள்ளது.

தலை, முதுகுப் பகுதியில் வாள் வெட்டுக் காயங்களுடன், வைத்தியசாலை அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார்.

## கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில்

# கடந்தகால போரில் 965 மாணவர்கள் தாய், தந்தையரை இழந்துள்ளனர்

கடந்தகால போர் நடவடிக்கைகள் காரணமாகக் கோப்பாய் பிரிவில் 965 மாணவர்கள் - தமது தாய் தந்தையரை இழந்துள்ளதாகச் செயலகப் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

இதில் 55 மாணவர்கள் தாய், தந்தை இருவரையும் இழந்துள்ளனர். 706 மாணவர்கள் தகப்பனை மாத்திரம் இழந்துள்ளார்கள். 169 மாணவர்கள் தாயை மாத்திரம் இழந்துள்ளனர். மேலும் 35 மாணவர்கள் தந்தையைப் பிரிந்து வாழ்வதாகவும் இனம் காணப்பட்டுள்ளனர். போர் அனர்த்தங்கள், அதன்பால் ஏற்பட்ட வறுமை மற்றும் மறுமணம் புரிதல் போன்ற காரணங்களினாலேயே மாணவர்கள் இந்த நிலைமைக்கு ஆளாக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (122)

# ஆசிய அபிவிருத்தி வங்கி பிரதிநிதிகள் வடமராட்சி கிழக்குப் பகுதிக்கு விஜயம்

(வடமராட்சி)

இரண்டு நாள் விஜயமொன்றை மேற்கொண்டு, நேற்றுமுன்தினம் யாழ்பபாணம் வந்த ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான பிரதிநிதி ஜோனகூனி - விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான வடமராட்சி கிழக்கில் மீனவர்களின் தொழில் மேம்பாட்டுக்காக 348 லட்சம் ரூபா நிதி வழங்கினார்.

நிகொட் அமைப்பின் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் இந்த நிதியை நெதர்லாந்து அரசு வழங்கியுள்ளது.

மருதங்கேணி, தாளையடி, வெற்றிலைக்கேணி போன்ற பிரதேசங்களில் நிகொட் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டுவரும் வீதிப் புனரமைப்பு மற்றும் கல்வி, சுகாதாரம் போன்றதுறைகளில் ஆரம்பிக்கப்பட்ட வேலைத்திட்டங்களை ஆசிய அபிவிருத்தி வங்கியின் குழுவினர் பார்வையிட்டனர்.

நெதர்லாந்து தூதரகத்தின் முதலாவது செயலாளர் ஜோன் ஹட்டன், நிகொட் திட்டத்தின் பணிப்பாளர் லங்காநேசன், திட்ட ஆலோசகர் என்.திருச்செல்வம், வடகிழக்கு மாகாண பிரதம செயலாளர் எஸ்.ரங்கராசா உட்பட பல முக்கிய அதிகாரிகள் இந்தக் குழுவில் இடம்பெற்றனர்.

# புதிய யாப்புக்கு அமையவாக பொதுக்கூட்டத்தை நடத்தவும்

இலங்கைச் செஞ்சிலுவைச்சங்க யாழ்.கிளையின்கீழ் இயங்கும் 14 பிரதேசசெயலர் பிரிவுகளிலும் அடங்கியுள்ள பிரிவுகள், அலகுகள் அனைத்தும் புதியயாப்பு நடைமுறை விதிகளுக்கு அமைவாகப் பொதுக் கூட்டங்களை நடாத்திமுடிக்கவேண்டுமென - யாழ்.கிளையின் செயலாளர் சகல பிரிவுத் தலைவர்களுக்கும் அறிவித்துள்ளார்.

இதனபடி 2004 ஆம் ஆண்டிற்கான அலகுகளின் வருடாந்த பொதுக் கூட்டம் - பெப்ரவரி 28 ஆம் திகதிக்கு முன்னரும், பிரிவுகளுக்கான பொதுக்கூட்டம் - பங்குனி மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னரும் நடாத்தி முடிக்க வேண்டுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (122)

# சின்னஞ் சிறு செய்திகள்

## கலாசார விழிப்புணர்வுக் கருத்தரங்கு

(அராலி)

சிறுவர் கல்விக்கும், பால்நிலை அபிவிருத்திக்குமான நிறுவனத்தின் அனுசரணையுடன் - சங்கானை பிரதேச செயலகம் நடாத்தும் கலாசார விழிப்புணர்வுக் கருத்தரங்கு- பொன்னாலை கல்விளான் பொது மண்டபத்தில் இன்று காலை 9 மணிக்கு, சங்கானை பிரதேச செயலர் சீ.ஏ.மோகனதாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் விருந்தினர்களாக - ஐ.என்.எஸ். நிறுவன இயக்குநர் பொன்மலர் இராஜேஸ்வரன், சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் கே.சிவசோதி ஆகியோர் கலந்துகொள்வர். (118)

## அரியாலையில் தொடரும் திருட்டுச் சம்பவங்கள்

அரியாலைப் பகுதியில் இரு வேறுபட்ட திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளது.

கடந்த வியாழக்கிழமை நள்ளிரவுவேளை அரியாலை ஸ்ரான்லிக் கல்லூரிக்கு முன்பாக உள்ள வீட்டின் ஜன்னலை உடைத்து, உட்புகுந்த திருடர்கள் அங்குள்ள பெறுமதியான பொருட்களையும், ஒரு தொகைப் பணத்தையும் திருடிச்சென்றுள்ளனர்.

தென்பகுதியிலிருந்து அண்மையில் வீடு திரும்பிய இந்த வீட்டு உரிமையாளரின் - வானொலிப் பொட்டி, இரண்டு பவுண் சங்கிலி மற்றும் கையடக்கத் தொலைபேசி என்ப வற்றுடன் 8 ஆயிரம் ரூபா பணத் தினையும் திருடிச்சென்றனர்.

இவ்வாறான திருட்டுச் சம்பவம் ஒன்று அரியாலை இலந்தைக் குளம் வீதியிலுள்ள வீடு ஒன்றிலும் இதேதினத்தில் இடம்பெற்றது.

இந்தத் திருட்டுச் சம்பவங்கள் தொடர்பாக பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (55)

## கும்பாபிஷேகம்

(வடமராட்சி)

மல்லாகம் நீளயம்பானை அருள்மிகு பெரியநாயகி சமேத பெரிய தம்பிரான் திருக்கோயில் மகா கும்பாபிஷேகம் - இன்று திங்கட்கிழமை காலை 9.49 மணி முதல் 10.20 மணிவரையுள்ள சுபவேளையில் நடைபெறவுள்ளது. (17)

## சுயமுயற்சிக் கடனுதவி

(ஆழியவளை)

பச்சிலைப்பள்ளி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உழைப்பாளரை இழந்த 10 குடும்பங்களுக்கு- கிளிநொச்சி பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தினால், ஒரு இலட்சத்து 70 ஆயிரம் ரூபா சுயமுயற்சிக் கடனுதவியாக வழங்கப்படடது.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிதி உதவியுடன் செயற்படுத்தப்பட்டுவரும் இந்தத் திட்டத்தில், பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள கோயில்வயல், ஊர் வணிகப்பற்று ஆகிய கிராமங்களைச் சேர்ந்தவர்களுக்கே இந்த கடன் வழங்கப்பட்டது. (122)

## பங்கீட்டு அட்டை மீளாய்வு

(அரியாலை)

அரியாலை வடமேற்கு ஜே/91 கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் - நாளை பங்கீட்டு அட்டை, பொதுசன மாதாந்த உதவிப் பணம பெறுவோரின் - பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறும் அட்டை ஆகியவை ஜே/91 கிராம அலுவலர் அலுவலகத்தில் வைத்து மீளாய்வு செய்யப்படவுள்ளதால், பிரதான குடியிருப்பாளர் - பங்கீட்டு அட்டை பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறும் அட்டை மற்றும் தேசிய அடையாள அட்டை என்பவற்றை நேரில் கொண்டுவந்து சமர்ப்பிக்கும்படி - அரியாலை வடமேற்கு கிராம அலுவலர் கேட்டுள்ளார்.

இந்தத் தினத்தில் மீளாய்வு செய்யத் தவறுவோர்களுக்குப் புதிய கூப்பன் முத்திரையும், புதிய பங்கீட்டு அட்டையும் வழங்கப்படமாட்டாது எனப் பிரதேசசெயலர் தெரிவித்தார். (55)

## பாலர் பாடசாலை திறந்துவைப்பு

சாவகச்சேரி வடக்கில் படைபாண்டான் தோட்டம் கந்தசாமி ஆலய முன்றலில் ஒரு முன்பள்ளிப் பாடசாலை - கடந்த ஞாயிற்றுக்கிழமை திறந்து வைக்கப்பட்டது. இந்தக் கட்டடம் தனியொருவரால் கட்டி அன்பளிப்பாக வழங்கப்பட்டது. கட்டடத்தை இந்துகலாசார அமைச்சின் செயலாளர் சிவமகாலிங்கம் நாடாவெட்டித் திறந்து வைத்தார்.

இந்தப் பாலர் பாடசாலை - ஸ்ரீபால முருகன் சனசமூக நிலையத்தினரும், படைபாண்டான் தோட்டம் கந்தசுவாமி கோவில் இந்து இளைஞர் மன்றத்தினரும் சேர்ந்து நிர்வகிப்பர். (37)

## நியாப் திட்டத்தின்கீழ் 40 குளங்கள் புனரமைப்பு

(ஆழியவளை)

யாழ்.மாவட்டத்தில் நியாப் திட்டத்தின்கீழ் 40 குளங்கள் புனரமைக்கப்படவுள்ளன. இந்தத் திட்டத்திற்கென உலகவங்கி 80 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது.

40 குளங்கள் புனரமைக்கப்படவுள்ளதுடன், 40 தடுப்பு அணைகளும் போடப்படவுள்ளன. மேலும் 12 பொதுக்கட்டடங்கள் அமைக்கப்படவுள்ளதாகவும் நியாப் திட்ட அதிகாரி தெரவித்தார். (122)

## விஞ்ஞான சங்கத்தின் கண்காட்சி

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் நடாத்தும் பாடசாலைகளுக்கிடையிலான விஞ்ஞான கண்காட்சி - எதிர்வரும் 25,26,27 திகதிகளில் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

தமிழ் மாணவர்களின்விஞ்ஞான அறிவை மேம்படுத்தும் நோக்கத்தோடு, யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் கடந்த ஆண்டுபோல இந்த வருடமும் நடாத்தவுள்ளது.

இதில் சகல மாணவர்களும் தவறாது பங்குபற்றி, தமது ஆக்கங்களைதந்து, வழமைபோல இந்த முறையும் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் ஒத்துழைப்பை வேண்டி நிற்கிறார்கள் விஞ்ஞான சங்கதத்தினர்.




தொடர்கதை

அங்கம் - 4

# கூடாதமலர்(கள்)

## பூ.நகுலன்

என்னதான் அவன் சொல்லுகின்றான் என்று கேட்பதற்காக அவனைக்காண அவள் பெற்றோர் சென்றனர். அவன் அவளிடம் தெரிவித்த கருத்துக்கள் எத்தகைய உணர்வினை ஏற்படுத்தின என்று அவர்களால் விளங்கிக் கொள்ள முடியவில்லை. கோபமா? அவமரியா தையா? நம்பிக்கை யீனமா? இப்படி எந்த நிலையில் அவள் பெற்றோர் ஆளாகினர். என்பதை வரையறுக்க முடியாது இருந்தது.

"நான் அவளுடன்வித்தியாசமான உணர்வில் பழகவில்லை. அவளை அப்படி ஒன்றும் வித்தியாசமாகக் கேட்கவில்லை. நான்அக்கா மாதிரி இவளுடன் பழகினேன். ஐஸ் கிறீம் வாங்கிக் கொடுத்தது, மோட்டார் சைக்கிளில் ஏற்றிச் சென்றது எல்லாம் அந்த உணர்வில்தான்" என்று அவன் அவர்களிடம் தெரிவித்தான். இவனுடைய இந்தச் சொற்களைப் பெற்றோராலேயே தாங்கிக்கொள்ள முடியாமல் இருந்தபோது அவளால் எப்படித் தாங்கிக் கொள்ள முடியும் என்ற எண்ணம் பெற்றோரின் மனதில் கவலையை உண்டு பண்ணியது. அவனுடைய அந்த நிலையை அவர்கள் தங்கள் மகளிற்குச் சொல்லாமலும் இருக்கவில்லை. அவளிடம் சொன்னார்கள். அவளும் அதற்குப் பின்னர் என்ன செய்வது.

அவள் பெற்றோர் இன்னோர் முயற்சியையும் செய்து பார்ப்போம் என்று கருதி அவனுடைய பெற்றோரிடம் சென்றனர். அவனைப் பெற்ற தாயிடம் சென்று 'இப்படி நீங்கள் கூறினீர்களாம். அப்படிக் கூறியதால், அவள் மனநிலை இப்படியாக இருந்து விட்டதே' என்று அவன் தாயாரிடம் இந்த விடயம் பற்றிப் பேசினார்கள்.

அவளுடைய தாயார் கூறியது மிகவும் வேதனையைத் தருவதாக அமைந்தது. 'ஏன் பிள்ளை இருக்கிறாய். உனக்கும் இவ்வளவு நாளாகிவிட்டது. திருமணம் நடக்கேல்ல. கடவுள் எப்பதான் வழி காட்டப்போறாரோ' என்று அவன் தாயார் இவர்களிடம் தெரிவித்தாள். மேலும் தான் 'அவளுடைய மனதைக் குழப்பும்படியாக எதுவும் கூறவில்லை. அப்படிக் கூறினால் என்னுடைய இறப்பு வீட்டிலை அடுத்த கிழமை நீங்கள் இருப்பியள். ஆண்டவன் சந்நிதியில் கற்பூரம் கொழுத்தி சத்தியம் பண்ண நான் தயாராயிருக்கிறன்' என்று அவளுடைய தாயார் - தான் இப்படிக் ஒரு விடயத்தைகக கூறவே இல்லை என மறுத்தார். "தன்னுடைய மகன் ஒரு இலட்சியத்தை அடையவேண்டும் என்று வெளிநாட்டிற்குத் தொழிற்பயிற்சிக்குச் சென்றவன். அவன் தனது இலட்சியம் பற்றிக் கதைப்பானே ஒழிய, அவன் வேறு எதையும் எங்களிடம் கதைப்பதில்லை. அவன்ரை இலட்சியத்துக்கு மாறாக நாங்கள் ஒருபோதும் குறுக்கே நிண்டது இல்லை. எங்க ளிட்டை நீங்கள் ஒரு வார்த்தை சொல்லியிருக்கலாம். எங்கட மகன் இப்படிப்பட்டவன் இல்லை. அப்படி ஏதும் என்றால் நாங்கள் விசாரிச்சுச் சொல்லியிருப்பம். அப்படியில்லாமல் நீங்கள் அவளின்ரை மாமனிட்டை போய்ச் செல்லியிருக்கிறியள். சரி நடந்தது நடந்து போச்சு. நாங்கள் ஒன்றும் சொல்லவும் இல்லை. அவனும் ஒன்றும் கேட்கவும் இல்லை. இதுதான் இப்ப கதை' என்று அவன் தாயார் கூறினார்.

"அவன் தொழிற்பயிற்சியிலை நிண்டவனாம். இடையிலை இப்படி ஒரு காரியத்துக்காக அழைத்து வரப்பட்டது. அவனுக்குக் கௌரவக் குறைவாம். இப்படி ஒன்றும் நடக்கவே இல்லையாம். உறவினர்கள் என்றிருந்துகொண்டு தங்களிடையே ஏற்பட்ட போட்டி பொறாமை காரணமாக இப்படித் தங்களிலை சேறு பூசுகின்றார்களாம்' என்பதாக அவளுடைய பெற்றோர் இவர்களிடம் கூறிக் கொண்டார். தங்களுடைய மகள் இப்படிப் பொய் கூறுவாளா? அவள் அப்படிக் கூறுவதாயிருந்தால் இவனைப் போய் ஏன் கூறவேண்டும். யார் பொய் சொல்லுகின்றார்கள் என்ற சிந்தனை அவள் பெற்றவர்களிடத்தே தோன்றியது. அவர்களுடைய நித்திரையை அந்த யோசனை அதிகமாகப் போக்கியது.

இதற்கிடையில் அவள் தன் மனதில் ஒரு தீர்மான முடிவை எடுத்தாள். இவன் தன்னைக் கேட்டது என்பது உண்மை. அப்படிக் கேட்கவில்லை என்று இப்போது கூறுகின்றான். என் மனதைக் கலைத்துவிட்டான். நான் இனி யாருடனும் வாழமாட்டேன் என்பதாக அவளுடைய தீர்மானம் அமைந்தது. அவள் ஒரு உறுதியான முடிவை எடுத்த காரணத்தால், இப்போது எல்லாம் அவ்வளவாக குழம்பிய மன நிலையின்றி இருந்தாள். இவளுடைய அந்த முடிவை அவளுடைய பெற்றோர் எவ்வளவு தூரம் ஏற்றுக்கொண்டார்கள் என்பதில் ஒவ்வொருவர் மனதும் வேறுபட்டது. அவள் இனிமேல் கல்யாணம் முடிக்காமலே இருக்கட்டும் என்று அவளுடைய பெற்றோர் ஒரு கணம் கூறினர். பின் னர் அவளுடைய மனது சிறிது சிறிதாகச் சிலவேளையில் மாறலாம். அவ்வாறு மாறினால் அவளிற்கு ஒரு கலியாணத்தைக் கட்டிவைக்கலாம் என அவளுடைய பெற்றோர் கருதினர்.

இந்த விடயம் ஒருவருக்குமே தெரியவராது என்றுதான் முதலில் அவர்கள் நினைத்தார்கள். ஒரு பிரச்சினைக்குள் மூழ்கி இருக்கும் போது, வெளியே யார் நிற்கின்றார்கள் என்ற யோசனை ஏற்படுவதில்லை அல்லவா. அதே மாதிரியாக இவர்கள் ஊரார் ஒவ்வொருவராக வந்து வந்து விசாரிக்கத் தொடங்கினார்கள். அவ்வாறு ஒவ்வொருவரும் வந்து கதைத்துக் கதைத்து அவளின் மனதில் ஆறிப் போயிருந்த புண்ணைக் கிளறிவிட்டிருந்தார்கள். உறவினர்கள் வந்து பெற்றோருடன் கதைத்துக்கொண்டிருக்கும் வேளையில், இவள் அவர்களைக் கண்டால் ஒருவித பதட்டமும், ஒரு வித உணர்ச்சிக் கொந்தளிப்புமாக இருந்தாள்.

இவளுடைய பிரச்சினையை மறக்கச்செய்யும் நோக்கில், இவளுடைய பெற்றோர் சிறிது சிறிதாக அவனுடைய கதைகளைக் கதைக்காமல் விட்டார்கள். அவளும் அந்தக் கதைகளைச் சிறிது சிறிதாக மறந்து வந்தாள். ஆயினும், ஒரு நாள் இவள் கோழி கலைப்பதற்காக வீட்டின் பின்புறம் சென்றபோது, கோழி கலைத்துவிட்டு வரும் போது உணர்வு இழந்து விழுந்துவிட்டாள். இவள் அவனை நினைத்திருந்த அந்த நாட்களில், அவளுடைய மனநிலை பாதிக்கப் பட்டிருந்ததன் எதிரொலி, இவளுடைய இந்த நடவடிக்கைகளிலே காணப்பட்டது. இவள் அவ்வாறான இயலாமை ஏற்பட்டவேளைகளில், அவ்வியலாமைக்குரிய காரணங்ளை ஆராய்ந்து பார்க்கின்ற வேளைகளில் மட்டுமே அவனுடைய ஞாபகங்களும், அவனுடைய கேள்விகளும் இவள் மனதில் வந்து மோதுவதுண்டு. மற்றைய வேளைகளில் இயல்பாக இருக்க முயன்றாள். அவள் அந்த நிகழ்ச்சிகளை மறக்கச்செய்யும் நடவடிக்கைளில் ஈடுபடலானாள். எனினும் வருகின்ற ஞாபகங்களை அவளால் தடுக்கமுடியவில்லை. அவள் அந்த மரங்களில் பூத்துக் கொண்டிருக்கும் பூக்களைப் பார்த்து மகிழ்ந்தாள். அப் பூக்களின் வாழ்க்கையை நினைத்து ஆராய்ச்சி செய்தாள்... காலையில் மலர்ந்து மாலையில் உதிர்ந்து வாடிவிடு கின்ற பூக்கள் - வாழ்க்கை போன்றதுதானே இந்த மனித வாழ்க்கை. இந்தப் பூக்கள் எப்படி அழகானவை யாகவும், கவர்ச்சியானவையாகவும் விளங்குகின்றன.



பூக்களின் அழகுக்கும் கவர்ச்சிக்கும் விஞ்ஞானரீதியான கருத்துக்கள் உண்டல்லவா? ஒரு பத்திரிகையில் படித்ததாக ஞாபகமே. பூக்களின் மகரந்தங்களைக் கொண்டுசென்று, தம் இனத்தைப் பெருக்கிக்கொள்ள அல்லவா அவை வாசனைகளையும் அழகையும் தம்முள் கலந்துகொண்டிருக்கின்றன. யார் சொன்னது பூக்கள் காலையில் மலர்ந்து மாலையில் வாடி விடுகின்றது என்று. அவ்வாறு வாடிவிடுகின்ற இடைக் காலத்தில் தேன் என்கின்ற ஒன்றைப் பெறுவதற்காகத்தானே வண்டுகள் பூக்களின் மேலே வட்டமிட்டு பறந்த வண்ணம் இருக்கின்றன. அந்த வகையில் பார்த்தால் பூக்கள் கூடத் தேன் எடுப்பதற்காக வருகின்ற வண்டுகளுடன் உறவாடுகின்றனவே.

தன்னுடைய அந்த அவலவாழ்வை அவள் மனதில் நினைத்துப் பார்த்தாள். இனிப்பூக்களையும் தன்னோடு ஒப்பிடமுடியாது என்று மனதில் கருதினாள். அவள் மீண்டும் பூக்களைப் பறித்து ஆலயத்திற்கு கொண்டுசென்று கொடுத்து மாலையாக்கி, ஆண்டவனிற்கு சூடுவதற்குரிய மனநிலையை ஒருவாறு பெற்றுக் கொண்டு வந்தாள். அந்தவேளையில், ஒரு நாள் அவளுடைய வாழ்வில் நடந்த நிகழ்ச்சி அவளை மகிழ்ச்சிக்கு உள்ளாக்கியது.

இவள் ஆலயத்துக்குச் சென்று வரத்தொடங்கிய நாட்களிலிருந்து இவளை அவதானித்து வந்த ஒரு ஆசிரியர் - இவளுடைய அழகையும், இவளின் வாழ்வின் பின்னணியையும் கேட்டறிந்து கொண்டார். அப்போது தன்னிடம் படித்த ஒரு மாணவன் திருமணமே வேண்டாம் என்று இருந்தவன்- வாழ்க்கையை அநியாயம் ஆக்கிவிட்டோமே என்ற கழிவிரக்கத்தில் ஆசிரியரிடம் பெண் பார்க்குமாறு கூறியது ஞாபகம் வந்து அந்த ஆசிரியருக்கு.

அந்த ஆசிரியருக்கு அந்த விடயத்தில் தலையிடக் கொஞ்சம் பயப்பட்டார். எனினும், இருவர் வாழ்க்கை தனித்தனியாகத் தன்கண்முன்னே சென்று கொண்டிருப்பதை அவர் ஒவ்வொரு நாளும் பார்த்து வருகின்றார். இந்த ஒரு காரணத்தால், அவள் வாழ்க்கையும் அந்த தன்னுடைய மாணாக்கனின் வாழ்கையையும் இணைத்துக் கற்பனைசெய்து பார்த்தார். தன்னிடம் படித்தவன் என்ற காரணத்தினால் அவன், தான் கூறுவதை ஏற்றுக்கொள்வான் என்று நம்பினார். அந்த ஆசிரியருக்கு அவருடைய பெற்றோரை நன்குதெரியும். அவன் அவ்வாறு நடந்துகொள்ளமாட்டான் என்பது அவர் அறிந்ததே.

இந்த உலகத்தில் நடக்கின்ற நிகழ்ச்சிகளிடையே ஒருவர் தன்னை விருப்பம் கேட்டுப் பின்னர், அவன் தன்னைத் திருமணம் செய்ய மறுத்தான் என்ற ஒரேயொரு காரணத்தினால், அவள் திருமணமே வேண்டாமென்று இருப்பது - அந்த ஆசிரியருக்குச் சரியாகப்படவில்லை. எனவே, ஆசிரியர் ஒரு நல்ல வாழ்க்கை ஒன்றினை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் என்ற உந்தலில், சில நடவடிக்கைகளை எடுத்தார். ஒருநாள் ஆசிரியர் தன்னுடைய மாணவனிடம் சென்று - 'தம்பி நீ ஏதோ காரணத்திற்காகத் திருமணம் வேண்டாம் என்றுகூறி இவ்வளவு காலமும் இருந்தாய். அதேபோல ஒரு பெண் இருக்கிறாள். அவளும் சில காரணங்களுக்காகத் திருமணம் வேண்டாம் என்று இருக்கிறாள். அவளின் கதை இதுதான்' என்று அவளின் கதையைச் சுருக்கமாக எடுத்துக்கூறினார்.

பின்னர் இப்படிப்பட்ட ஒருத்தியை நீ கட்டிக்கொண்டாய் என்றால், இருவர் மனதும் ஒன்றாகப்போகும். நானும் என்னுடைய மாணவனொருவனுக்கு நல்ல வாழ்க்கையை அமைத்துக் கொடுத்ததாய்ப் போய்விடும். நீ என்ன சொல்கிறாய். ஒரு பெண்ணுக்கு வாழ்க்கை கொடுக்கின்ற ஒரு தியாகத்தை நீ செய்ய விருப்பம் என்று சொன்னால், நான் அதற்குரிய நடவடிக்கைகளை எடுப்பன்' என்று கூறினார் ஆசிரியர். 'கட்டாயப்படுத்தி உன்னைக் கேட்கவில்லை. நன்றாக யோசித்து ஒரு நல்ல முடிவாய் எடப்பா' என்று கூறியவண்ணம் அவர் அவனிடமிருந்த விடை பெறுவதற்காக எழுந்தார்.

அவன் ஆசிரியரின் கையைப் பிடித்துக் கூறினான் - 'சேர் நீங்கள் என்னுடைய வாழ்கையில் கல்வியை மட்டும் தரவில்லை சேர். என்னுடைய வாழ்க்கையில பல பல்வேறு உதவிகளைச் செய்திருக்கிறியள். என்னுடைய வாழ்கையில நான் இவ்வளவு உயர்ந்திருப்பதற்கு நீங்கதான் சேர் காரணம். நீங்கள் எது சொன்னாலும், செய்தாலும் அது நல்ல முடி வாகத்தான் சேர் இருக்கும். ஆகவே, நீங்கள் என்ன செய்ய நினைக்கிறியளோ, அதை நான் செய்யிறன். ஆனால், ஒண்டு - அவளின் பெற்றோரிட்டை முதலிலே இதைச் சொல்லி, அவளின் முழுச்சம் மதத்தையும் பெற்ற பின்னர்தான் இந்தத் திருமணத்தை நீங் கள் நடத்திவைக்கவேண்டும். விருப்பமில்லாமல் ஒரு பெண்ணை நான் கட்டிக்கொள்ள விரும்பவில்லை சேர். அவள் எவ்வளவு தூரம் பாதிக்கப்பட்டிருக்கிறாள், அவளுடைய மனப்புண் எவ் வளவு தூரம் ஆறியிருக்கு, அவள் என்னை எவ்வளவு தூரம் புரிந்துகொள்வாள், அவளின் முழுமையான சம்மதத்தை முதலில பெறவேண்டும் சேர். அதற்குரிய நடவடிக்கைளில் முதலிலே ஈடுபடுங்கள் சேர்' என்று அவன் ஒருவாறு தன் ஆசிரியரிடம் கூறினான். அவரும் மாணக்கனின் மனநிலையை நன்கு புரிந்துகொண்டு, தன்னுடைய கோரிக்கைக்கு, தன் விருப்பத்திற்கு மறுப்புச்சொல்லாமல் சம்மதித்த அந்தச் செய்கையை நினைத்து மகிழ்ந்தவராக, அவனிடமிருந்து விடைபெற்றுச் சென்றார். 'கூடிய சீக்கிரம் அவள் சம்மதத்துடன் விரைவில் மீண்டும் சந்திக்கின்றேன்' என்றுகூறியச் சென்றார்.

ஓரிரு நாட்கள் கழித்து, அந்த ஆசிரியர் அவளின் வீட்டிற்குச் சென்றார். அவள்தான் முதலில் அவரை வரவேற்றாள். 'வாங்க சேர் வாங்கோ. இந்தக் கதிரையில இருங்கோ சேர்' என்றுகூறி, ஆலயத்தில் அடிக்கடி சந்தித்துக் கதைத்த பழக்கத்தில் அவரை உபசரித்துவிட்டு, தன்னுடைய பெற்றோரை அழைத்தாள். 'அம்மா, அப்பா இப்படி வாங்கோவன். சேர் வீட்டிலை வந்துநிற்கிறார். வந்து கதையுங்கோ' என்றவள், ஆசிரியரைப் பெற்றோருக்கு அறிமுகம் செய்தாள். 'நான் கோயிலுக்குச் சென்றுவாரவேளை அடிக்கடி இவரைச் சந்தித்துக் கதைக்கிறனான். என்னுடைய வீட்டைப்பற்றிக் கேட்டார் - நான்தான் சொன்னான் வீட்டின் அடையாளம். ஒரு நாள் எங்களுடைய வீட்டிற்கு வாங்கோ என்று - அதுதான் அவர் இப்ப வந்திருக்கிறார்' என்றுகூறிய அவள், ஆசிரியருக்குத் தேநீர் வைப்பதற்காக வீட்டிற்குள் சென்று தேநீர் தயாரிக்கத் தொடங்கினாள். ஆசிரியர் பெற்றோருடன் கதைத்தார்.

(தொடரும்)

# நூல் அகம்

## கோசல்யா கதைகள் - கவிதைகள்




புலம்பெயர்ந்து ஜேர்மனில்வாழும் கோசல்யாவின் 3 ஆவது நூல் இது. கதைகள்- கவிதைகள் உள்ளடங்கியுள்ளன. இவர் ஓர் ஆசிரியர் என அறியக்கூடியதாய் உள்ளது. உண்மையில் வெளிநாட்டில் இருந்துகொண்டு - அங்குள்ள ஓய்வு ஒழிச்சலற்ற வாழ்வுமத்தியில் இருந்துகொண்டு- எழுதுவது என்பது பாராட்ட வேண்டிய விடயம்.

நூலுக்குள் நுழையுமுன் நான் இன்னொருவிடயத்தையும் குறிப்பிட விரும்புகின்றேன்.

பெண் விடுதலை என்பது ஆண்களுக்கு எதிரானது அல்ல. சமூகத்தில் ஒடுக்கப்படும்பெண், அனுபவிக்கும் துன்பங்களுக்கான காரண காரியங்களில் ஆணாதிக்கமும் ஒன்று. இது ஆண்களுடைய தவறல்ல. எமதுசமுதாயம் காலங்காலமாக ஏற்படுத்திக்கொண்ட சமூக அமைப்பு முறையில் உள்ள அடிப்படைத் தவறு.

இந்தசமூக அமைப்பு முறையை விளங்கிக்கொண்டு சமூகமாற்றம் ஒன்றை ஏற்படுத்தும் வகையில் இயங்க வேண்டியது படைப்பாளிகளுடைய கடமையாக இருக்கிறது.

இனி நூலினுள் நுழைவோம்.

யோகலட்சுமிகள்:- பெண்களின் சீதனப்பிரச்சினையைத் தொட்டிருக்கிறது. என்ற கவிதை.

**வரலட்சுமி வராததால்**
**யோகலட்சுமிகளிடம் வந்தவை வடிவுதான்**
**தனலட்சுமி தரிசனம் தரவேயில்லை**
**தரித்திரம் ஆனார்கள் - இனி**
**சந்தானலட்சுமி எப்படி வரும்?**
**தாலியில்லாத இவர்களிடம்**

இப்படியாக கவிதை நீள்கிறது. இன்னும் பல கருத்துக்கள் கவிதைகளில் ஆராயப்படுகின்றன. தாய்மையின் தூரம் கூறும் கவிதை உண்டு.

நிதர்சனிகள் என்ற கவிதை - அந்தக் கவிதையிலே -

**கூட்டமைப்பு கொண்டாட**
**எங்களுக்குள்ளே எத்தனை இழவுகள்**
**இதை உணரும் நாள் எதுவோ?**

கவிதைகள் இன்னும் ஆழப்படவேண்டியவையாக உள்ளன. சில கவிதைகள் பல தடவைகள் படித்தே புரிந்துகொள்ளப்பட வேண்டியவையாக உள்ளன.

கதைகளைப் பொறுத்த வகையில்-

1.மண்வாசனையோடு நல்ல அமைப்பில் கதைகள் அமைந்துள்ளன. ஆணும், பெண்ணும் நண்பர்களாக இருப்பதை சந்தேகக் கண்கொண்டு பார்க்கும் சமூகத்தின் இழிநிலை பற்றியது.

2.புரிந்துணர்வற்ற கணவனைப்பற்றியது. (குருடான கவிஞனுக்கு)

3.கொடுமைக்கார கணவன் பற்றியது (நிஜதரிசனம்) - தன்னாலான வழியில் எல்லாம்-எல்லாப்பிரச்சினைகளையும் எதிர்கொண்டு இன்னும் இயலாத நிலையில் தற்கொலை செய்துவிடுகின்ற பெண்ணின் கதை உண்டு. இந்தக் கதையில் வருகிற புவனேசக்கா என்கின்ற பாத்திரம் மனசில் அப்படியே நிக்குது.

4. சீதனப்பிரச்சினை பற்றி ஒரு கதை -

இதிலை - வெளிநாட்டிலை இருந்துகொண்டு திருமணம் செய்ய யாழ்ப்பாணத்தில் வீடு கேட்கின்ற ஆணையும், யாழ்ப்பாணத்தில் இருந்துகொண்டு எதுவும் வேண்டாம் என்று திருமணம் செய்யமுன்வருகின்ற ஆணையும் பற்றியது. நல்ல கதை இது.

5. வீட்டு வேலை எல்லாவற்றையுமே மனைவி செய்யவேணும் என்றகணவன் - தயாரிக்கின்ற ரீயைக்கூட மனைவி தன்கையில் தரவேணும் என எதிர்பார்க்கின்ற கணவன்- மனைவி எழுதுகின்ற எழுத்தைக்கூட தன்ர பெயரில் பத்திரிகையில் பிரசுரிக்கின்ற கணவன்- பெண் உரிமையைச் சுரண்டலை விளக்குகின்ற கதை இது.

பின்னாலையும் விமர்சனம் முன்வைக்கின்றதுக்கு இருக்கினம். ஆனபடியானால் நானும் அதிகளவில் நீட்டிக்கொண்டு போக விரும்பேல்ல.

8. அக்கா - என்று சொல்லி ஒரு கதை

தம்பி காதலிக்கின்ற பெண்ணை திருமணம் செய்யவிடாமல், தனக்குப் பிடிச்ச பெண்ணை திருமணம் செய்துவைக்கின்றதுடன் தம்பியிடம் பொருளாதாரரீதியாக சுரண்டுகின்ற அக்கா பற்றியது. கடைசியில அக்கா செய்துவைக்கின்ற பெண் இவரில் சந்தேகப்பட்டு குடும்பம் பிரியிற கதை.

11. நோபல் பரிசு என்ற கதை - குழந்தைகளின் உணர்வுகளை வைத்து எழுதப்பட்டது. உண்மையில் இன்றைக்கு குழந்தைகளிடம் இருந்துதான் பெரியவர்கள் கற்றுக்கொள்ள வேண்டியிருக்கின்றது.

குடித்துவிட்டு அமளிப்படுகின்ற தந்தை, வழமைபோல் எதிர்ப்புக்காட்டாத தமிழ்ச் சமூகத் தாய். பிள்ளைகள் தமக்குள் பேசுகிறார்கள். பெண்பிள்ளை சொல்கிறாள் தமையனுக்கு-

"நானும் இனி உன்னோடை கராத்தே பழக வருவன். அடிக்கிறவைக்கு திருப்பி அடிக்கவேணும். அம்மா மாதிரி அப்பாவிட்ட அடி வாங்கமாட்டன்" ஆண்பிள்ளை தந்தையிடம் கேட்கின்றான்-

"நீங்கள் அற்ககோல் பாவிச்சிருந்தீங்கள். நானும் பாவிச்சிருந்தால் தானே உங்கட கதையும் என்ரை கதையும் தோதா இருந்திருக்கும்" பிறகு வேலைக்குப் போன தகப்பன் தாய்க்கு ரெலிபோன் செய்துசொல்கிறார்-

உனதுவாரிசுகள் சரியான வழியில் தலை எடுக்கின்றன" என்று அவர் திருந்திவிடுகின்றார்.

இப்படியாக கவிதைகள் போகின்றன. யதார்த்தமான உரையாடல்களே தன்ரமனம் பார்த்துக்கோபப்பட்ட கருத்துக்களை அவர் கதைகளாக்குகின்றார் என்பது புரிந்துகொள்ள முடியுது. கதைகளோடு நல்ல வகையில் ஒன்றித்துப் போக முடியுது. கதைகளில் கவிதை தன்மையும் இருக்கு.

இந்தக் கதைகளில் பெண்களுக்கு ஏற்படுகின்ற பிரச்சினைகளோடு, பெண்களால் ஏற்படுகின்ற பிரச்சினைகளையும் முன்வைக்கிறார்.

அறியாமை என்பது யாரிடம் இருந்தாலும் அது களையப்படவேண்டியதுதான்.

எங்களுடைய தேசியத் தலைவர் அவர்கள் கூறியது போல -

"ஆணும், பெண்ணும் ஒருவரை ஒருவர் பரஸ்பரம் புரிந்துகொண்டு ஒத்திசைவாக வாழுறதுதான் வாழ்க்கை என்று"

உண்மைதான் புரிந்துணர்வோடு ஆண் - பெண் என்ற வேறுபாடுகளுக்கு அப்பால் நாம் மனிதர்களாக வாழ்வோம்.

இந்தப் படையலின் நாயகி கோசல்யா இன்னும் இன்னும் படைப்பிலக்கிய துறையில் வளரவேண்டும். நிறைய படைக்கவேண்டும்.

**-ஆதிலட்சுமி சிவகுமார்.**

## சிநேகிதியே!

நதிக்கரையோரம்
மாலை நேரச் சூரியன்
சுடாமல்
வீழ்ந்து பரவிய அன்றைய
நாள்
அள்ளிய மணலில்
பள்ளமாகவும், திட்டாகவும்
எதை வாங்கி
நிற்கின்றது

ஒன்றுமேயில்லாத
ஓட்டத்தில்
கொண்டுபோய்விட்ட
மணலின் தூய்மையாக
மினுமினுத்து
கொண்டிருக்கின்றது.

விழிமோதி
சிதறிவிடாமல் திரும்பிய
எத்தனை கண்களுக்கு
அழகானவள்.

பேருந்திலும் நடுவீதியிலும்
ஒதுங்கி வழிவிட்டு
பறந்து வந்து உட்கார
கிளைகள்
உள்ள
ஒரு கொப்பு இல்லாமல்
தனிமைப்பட்டு
சிலிர்த்துக்கொண்டு கீழே
பார்த்து
நகர்த்திச் செல்லும்
வாழ்க்கை
ஆறுதலடைகின்றது.

புல்லின் மேற்பரப்பில்
பனியின் ஆய்வரங்கம்
மழை காலத்தில்
குடைபிடித்து நிற்கும்
காளான்
இயற்கைக்கு மட்டும்
ஒத்துப்போக
முடிகின்றது.

பாடசாலைகளில் படித்த
காலங்களில்
ஒவ்வொரு வகுப்பறைக்குள்ளும்
விளையாட்டு மைதானத்திற்குள்ளும்
சிற்றுண்டி
உணவகத்திலும்
தட்டிவிட்டு பறித்து
ஓடிய நட்பு மட்டும்
மீதமாகவுள்ளது.

**செல்வா**

## பொறுக்கி எடுத்த கவிதைகள்

**1. கொஞ்சம் தேநீர் நிறைய வானம்.**

நிலா அழுதாலும் வெளிச்சம் தான்

* * *

'புத்த வா' என்கின்ற
எங்கோ ஓர் போதிமரத்தின்
சலசலக்கும் இலைகள்
கடைசியில்
அது நிகழ்ந்தே விடுகிறது.

- வைரமுத்து.

* * *

2,1, வார்த்தைகள் மரணித்தபின்
மௌனத்துள்
எவ்வளவைத் தான்
புதைத்து வைக்க முடியும்?

2 இனி யென்ன?... என நிமிர்கையில்
நெடு மூச்செறியும்
மன ஆதங்கத்தின்
உருவெளித் தோற்றம்

3. தூக்கத்திற்கும் விழிப்பிற்குமிடையே
அல்லாடும்
மானுட நிலையில்
நட்சத்திர நடுக்கம்.
சாமக் கோழியின் கூவலில் மட்டும்
கடமையுணர்வுடன் கூடிய
நம்பிக்கையின் சாயல்...

4. போராட்டத்தின் வென்றெடுப்புத்தான்!
வாக்கியத்தின் முற்றுப்புள்ளி
வரலாற்றின் முற்றுப்புள்ளியல்ல.

5. அசிங்கங்களை அப்படியே அப்பட்டமாக
நிராகரிக்கையில்...
தீவிரவாதி என அடையாளமிடப்பட்டேன்.

6. கைதட்டவும்
கையுயர்த்தவும் மறுத்ததனால்
எனக்கு சூட்டப்பட்டதோ
கைக்கூலி என்ற பட்டமே!

7. புரிந்துணர்வு என்பது
இதயத்தின் பரிபாஷை
நானறிவேன்
நாக்கும் உதடும்
நடிக்கத் தெரிந்தவை

8. கோவணத்தை கழட்டித்தா
வேட்டி தருகிறேன்- என
என்னிடம் சொல்லாதே - நான்
என்
இழப்பை மட்டுமல்ல
இருப்பையும் உணர்ந்து
வெகு காலமாகிவிட்டது.

9. ஒவ்வொரு நெடு மூச்சும்
இன்னொரு மனிதனின் சரிவுக்காய்
மையம் கொள்ளும்
புயலின் மூலச் சுழிப்பாகின்றது.

ராதேயன்.

## நிழல் படம்!



(26.01.2004) அன்று அதிகாலை எனது புகைப்படக்கருவியை எடுத்துக்கொண்டு, ஏதாவது ஒரு நல்ல நிழல்படம் எடுத்துவிட வேண்டும் என்று மனதில் திட்டமிட்டு சைக்கிளில் சென்றுகொண்டிருந்தேன்.

ஓட்டுமடம் சந்தி தாண்டி 100 மீற்றரில் பொம்மைவெளியில் நிறைய வீடுகள் ஆட்களில்லாமல் உடைந்துகாணப்பட்டது, உடைந்த வீடுகளை நிழல்படம் எடுக்க மனமில்லாமல், எடுத்துக்கொண்டு நகர்ந்தேன்.

யாழ். நகரிலுள்ள குப்பைகளுக்கு ஒரு இடம் பொம்மைவெளியில் ஒதுக்கப்பட்டிருந்தது. அதையும் மூக்கினை மூடமுடியாமல் படம் எடுத்தேன். பின்பு அவ்விடத்திலிருந்து நகர்ந்து சென்றேன் வெளியினூடே... அமைச்சர் மகேஸ்வரன் கட்டியிருக்கும் குடியிருப்புக்களின் முன்னும் இராணுவ முகாம், இதனைப் படம் எடுத்தும் என்னசெய்வது அதுதானே எல்லாப் பத்திரிகைகளிலும் போட்டுவிடுவார்கள். அந்த இடத்தில் ஒரு நிமிடமும் நிற்கமனமில்லாமல் நகர்ந்தேன்.

சிறிது தூரம் சென்றதும் கல்லுண்டாய் பாலத்திற்கு போவதற்கு 200 மீற்றர் தூரம் முன்னே தரையில் சிறிய நீர்த்தேக்கத்துக்கு நடுவே, ஒரு மேட்டுநிலம் அதன் மேல் புற்கள் வளர்ந்திருந்தது. அதன் மேல் நிறைய வெள்ளைக்கொக்குகளும், கறுப்புக்கொக்குகளும் தலையை திருப்பித்திருப்பி சுற்றும் முற்றும் பார்த்தவண்ணம் இருந்தன. எப்படியாவது இதனை எடுத்துவிடவேண்டும் என்று, முடிவெடுத்து, அந்த வீதியால் வந்த ஒருவரைக் கேட்டேன் இங்கே மிதிவெடி இருக்குமா? இருந்தாலும் இருக்கும், பார்த்துப் போங்கள்... என்றார்.

அரைவாசி ஈரம் கசிந்த வயலில் இறங்கினேன். எனது புகைப்படக்கருவியை சரி செய்துகொண்டேன். மெதுவாக ஒவ்வொரு காலடியையும் எடுத்து வைத்து நகர்ந்தேன். கொக்குகள் இருக்கும் தூரத்திற்கும் எனக்கும் இடைவெளி 50 மீற்றர் ஆகும். குந்தியிருந்து படத்தினை எடுப்பதற்கு தயார் செய்தேன்.

நான் படம் எடுக்கப்போவதை அந்த வீதியால் வந்த இளைஞர்கள் கண்டுவிட்டனர். உடனே இளைஞர்கள் கல்லினால் கொக்குகள் இருக்கும் இடத்திற்கு எறிய, எறிந்த கல்லில் தண்ணீர்ச் சிதறலினுள் கொக்குகள் பறக்க நானும் சரியாகப் படம் எடுத்தேன். திருப்தியடைந்து வீதிக்குவர...

படம் எடுப்பதை குழப்பிவிட்டோமே என்று, தங்களுக்குள் நினைத்து, நான் எதிர்பார்த்த படம் இதுவெனத் தெரியாமல், விழிபிதுங்கி முழுசிக்கொண்டு நின்றார்கள். அந்த இளைஞர்கள் அருகே சென்று நன்றி என்று சொல்லிவிட்டு ஒரு புன்னகையுடன் நகர்ந்தேன். ஒன்றுமே புரியாமல் நின்றார்கள்.

**செல்வம்**

சர்வதேச அரசியலில்... **கே.ரீ.கணேசலிங்கம்**

**இந்தியர்கள், பாகிஸ்தானுக்கு எதிரிகளாயினும், இஸ்லாத்திற்கு முரணானவராயினும் அப்துல்கலாமை தாம் மதிப்பளிக்க வேண்டிய, கௌரவிக்க வேண்டிய உயர்ந்த இடத்தில் அமர்த்தியுள்ளனர். அதனால், அணுவிஞ்ஞானி பாதுகாக்கப்படுவதுடன் அவரது பணி மதிக்கப்படுகின்றது என்பதை மறுக்க முடியாது. இது இந்தியர்களின் அரசியல் கலாசாரம்.**





# அப்துல்கான் மீதான அவமதிப்பு

# புஷ் - முஷாரப் கூட்டுசதியின் விளைவே

அறிவியல் ஒரு சமூகத்தின் வளர்ச்சியை காட்டுகின்ற ஆதாரசக்தியாகும். அறிவியலால் மனிதசமூகம் பெரும் மாற்றங்களை அடைந்ததுடன், இயற்கையின் சீற்றங்களிலிருந்து தம்மையும், தனது வாழ்வியலையும் மனிதன் பாதுகாத்துக்கொண்டான். அப்படியான அறிவியல் தளத்தில் ஒன்றாக விளங்கும் அணுப்பரிசோதனை ஆக்கபூர்வமானதாக பயன்படுத்தப்படுவதைவிட, அழிவுக்காக அதிகம் மதிப்பிடப்படுகிறது. அதனை உருவாக்கிய விஞ்ஞானிகளைக்கூட அந்த மதிப்பின் வரிசைக்குள் அரசியல் சதுரங்கம் வீழ்த்திவிடுகின்றது. அணுவாற்றலைப் பெற்று பாகிஸ்தானுக்குக் கொடுத்த அணுவின் தந்தை (பாகிஸ்தானின்) யாக போற்றப்பட்ட அணுவிஞ்ஞானி அப்துல்கானின் அவமானத்திற்கு பின்னால் உள்ள அரசியலை இவ்வாரம் பரிசீலிப்போம்.

ஏட்டிக்குப் போட்டியான இரு தென்னாசிய நாடுகளுமே 1998 ஆம் ஆண்டு அடுத்தடுத்து அணுவாயுதப் பரிசோதனைகளை ஏற்படுத்தி சாதனைபடைத்தன. இந்தியாவை தொடர்ந்து பாகிஸ்தானின் நடவடிக்கை உலக இஸ்லாமியர்களுக்கு மகிழ்ச்சியான செய்தியாகவே அமைந்திருந்தது. ஆனால், இரண்டு நாடுகளுமே இயல்பினால், கலாசாரத்தினால், நாகரிகத்தினால் வேறுபட்டவர்கள் என்பது அவர்களது அணு விஞ்ஞானிகளைக் கௌரவிப்பதில் இருந்து விளங்கிக் கொள்ளமுடிகிறது. இரு விஞ்ஞானிகளும் முஸ்லிம்கள் மட்டுமல்ல பெயர்களாலும் அதிக வேறுபாடு அற்றவர்கள். ஒருவர் அப்துல்கலாம் மற்றவர் அப்துல்கான். இந்தியர்கள், பாகிஸ்தானுக்கு எதிரிகளாயினும், இஸ்லாத்திற்கு முரணானவராயினும் அப்துல்கலாமை தாம் மதிப்பளிக்க வேண்டிய, கௌரவிக்க வேண்டிய உயர்ந்த இடத்தில் அமர்த்தியுள்ளனர். அதனால், அணுவிஞ்ஞானி பாதுகாக்கப்படுவதுடன் அவரது பணி மதிக்கப்படுகின்றது என்பதை மறுக்க முடியாது. இது இந்தியர்களின் அரசியல் கலாசாரம்.

அப்துல்கானோ பாகிஸ்தானிய ஆட்சியாளர்களுக்கு பலிக்கடாவாகியிருப்பார். அணு இரகசியங்களை லிபியா, ஈரான், வடகொரியா போன்ற நாடுகளுக்கு விற்பனை செய்த விஞ்ஞானியாக, குற்றவாளியாக, தேசத்துரோகியாக, அவமானத்தின் சின்னமாக கருதுமளவிற்கு மதிக்கப்பட்டவராகிவிட்டார். இது பாகிஸ்தானியரின் அரசியல்கலாசாரம். உண்மையில் அப்துல்கானுக்கு நிகழ்ந்தது அல்லது அணுவிஞ்ஞானிக்கு பாகிஸ்தானியர் கொடுத்த தண்டனை, அணு இரகசியங்களை விற்பனை செய்ததற்காக கொடுத்த தண்டனை அல்ல. ஆட்சியாளர்களின் அரசியலை தக்க வைக்க அப்துல்கானை பலியிட்டிருக்கிறார்கள். இதனை சற்று விரிவாக நோக்குவோம்.

பாகிஸ்தான் ஜனாதிபதி முஷாரப்பின் அரசியல்வாழ்வு ஆபத்துமிக்கது, அபாயகரமானது, எந்த சந்தர்ப்பத்திலும் எதுவும் நிகழக்கூடியது. காரணம் மக்களின் விருப்புக்களால் ஆட்சியைப் பிடித்தவர் அல்ல முஷாரப். எனவே, எப்போதும் அவர் எச்சரிக்கையுடன் வாழவேண்டியர். உள்நாட்டிலும் சரி, வெளிநாட்டின் செல்வாக்குகளாலும் சரி ஆபத்து எப்போதும் ஏற்படலாம். இதனால், உள்நாட்டு சக்திகளையும், வெளிநாட்டு சக்திகளையும் திருப்திப்படுத்தவேண்டியது முஷாரப்பின் பணிகளில் ஒன்றாகும். அதிலும், அமெரிக்கா, பிரித்தானியா போன்ற நாடுகளின் ஆட்சியாளர்களுக்கும் உளவுத்துறைகளுக்கும் விசுவாசமாக உழைப்பதுடன், நலன்களைப் பாதுகாக்க வேண்டியவராகவும் முஷாரப் உள்ளார். இந்த சந்தர்ப்பத்தில் தான் அமெரிக்கா - பாகிஸ்தானிய நெருக்கமும், இந்தியாவை சவாலாகக் கொண்டு தென்னாசியாவில் பாகிஸ்தானை பாதுகாக்கவும் முஷாரப்பால் முடிகிறது. அதுமட்டுமல்ல முஷாரப் தனது பதவியையும், பாகிஸ்தானின் அத்தியாயத்தை தனதாக்கிக் கொள்ளமுடிகிறது.

இத்தகைய நெருக்கத்தின் மத்தியிலேயே அமெரிக்கா, பிரித்தானியா உளவுத்துறைத் தகவல்கள் அணுவாயுத பரவல் தடை மேற்பார்வையாளர்களது அறிக்கைகள் முஷாரப்புக்கு எதிரானதாக திரும்பியது. பாகிஸ்தானே - லிபியாவுக்கும், ஈரானுக்கும், வடகொரியாவிற்கும் அணுவாயுதப் பரிசோதனைக்கான அனைத்து இரகசியங்களையும் கசியவிட்டுள்ளது என அவ்வறிக்கைகளில் தெரியவந்துள்ளது. இதனால், உலகத்திற்கும், அமெரிக்க, பிரித்தானிய மக்களுக்கும் அவ் ஆட்சியாளர்கள் பதிலளிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அதாவது, இவ்வாறு அணுவாயுதங்களை பரவலாக்கும் பாகிஸ்தானுடன் அமெரிக்கா எப்படி உறவை வைத்துக்கொள்ளும் என்பதே பிரதான கேள்வியாகும். அத்தகைய பிரச்சினை நெருக்கடியை நோக்கி நகரமுன்பே தீர்வைகண்டுவிடவேண்டும் என்பதே அமெரிக்க ஜனாதிபதியின் விருப்பமாகும். அத்தகைய கூட்டு வேலையில் ஒன்றாகவே அப்துல்கான் பலியிடப்பட்டுள்ளார். சுருக்கமாகக் கூறினால் புஷ் - முஷாரப் கூட்டுச் சதியில் பாகிஸ்தான் அணுவிஞ்ஞானி மாட்டியுள்ளார் எனலாம். அவ்வாறாயின் ஏன் மன்னிப்பு கொடுக்கப்பட்டது என்ற கேள்வி எழலாம்.

உண்மையில் அணுவிஞ்ஞானியால் தனித்து இரகசியங்களை அத்தகைய நாடுகளுக்கு விற்பனை செய்திருக்கமுடியாது. அவ்வாறாயின், உலகத்தின் எந்த நாட்டிலும் அணுவாயுதம் இவ்வளவு முதன்மையானதாக மாறியிருக்க வாய்ப்பிருக்காது. எனவே, கூட்டான வியாபாரத்தில் ஜனாதிபதி முஷாரப்புக்கும் தொடர்பிருக்க வாய்ப்பிருப்பதனால், அப்துல்கான் விசாரிக்கப்படவோ, நீதிமன்றத்தில் நிறுத்தப்படவோ முடியாதவராக காட்டுவதற்கு மன்னிப்பை முஷாரப் நாடியிருக்கலாம். அத்துடன், அப்துல்கான் தண்டிக்கப்பட்டமுறையும் மன்னிப்புக் கொடுக்கப்பட்டமுறையும் முஷாரப்பால் ஏற்பாடு செய்யப்பட்ட உரையைப் படித்ததுபோலவே அமைந்திருக்கின்றது. அதாவது, குற்றச்சாட்டை முன்வைத்தும் மன்னிப்பை வழங்கியதும் முஷாரப். எனவே, இது திட்டமிடப்பட்ட சதி வேலையாகவே அமைந்திருக்கின்றது.

இதனால், முஷாரப் ஆட்சி மேலும் தக்க வைக்கப்பட்டிருப்பதுடன் அமெரிக்க நலனின் காவலனாக முஷாரப் விளங்குவார் என்பதையும் நிறுவக்கூடியதாகவுள்ளது. உலகநாடுகளிலிருந்தும், உள்நாட்டு சக்திகளில் இருந்தும் முஷாரப் பாதுகாக்கப்பட்டிருக்கிறார். இவ்வகையான ஓர் அரசியல் நாடகத்தை அரங்கேற்றத் தவறியிருந்தால் முஷாரப்பிற்கு சர்வதேச மட்டத்தில் நெருக்கடி அதிகரித்திருக்கும். அப்துல்கானை பலிகொடுத்து, முஷாரப் நெருக்கடிகளிலிருந்து தப்பிப் பிழைத்துள்ளார்.

இந்தியர்களுடன் ஒப்பிடும்போது - பாகிஸ்தானியர் தமது உற்பத்தியோடும், பொருளாதார உருவாக்கத்தோடும் அணுவாற்றலைப் பயன்படுத்தும் தொழில்நுட்பத்தைப் கொண்டிருக்கவில்லை என்றும், அதனைப் பெறுவதற்கு அவர்கள் முயற்சிக்கவில்லை என்றும் பொருளியலாளர்கள் வாதிடுகின்றனர். இதனால், அணுவாற்றலை விற்பனை செய்வதன் ஊடாகவே அதிக வருமானத்தை ஈட்டலாம் என்ற யதார்த்தத்தைப் பாகிஸ்தான் ஆட்சியாளர்கள் மேற்கொண்டிருக்கலாம். இதுவே பாகிஸ்தானின் பொருளாதாரத்திற்கு ஆதாரமாக அமைந்திருக்கலாம். எனவே, இரகசிய விற்பனை தவிர்க்கமுடியாது. ஆனால், அணு விஞ்ஞானியைப் பலிகொடுத்ததை நியாயப்படுத்தமுடியாது. விற்பனை இல்லையெனில் அணுவாயுதம் பரவியே இருக்க வாய்ப்பிருக்காது. எனவே, அறிவியல் அரசியலின் அடிமையாக்கப்பட்டமை அனுபவத்தை மீண்டும் ஒருதடவை கற்றுள்ளோம்.

## வன்னிப் பிரதேசத்தின் அபிவிருத்திக்கு கிராமிய அபிவிருத்தி வங்கி கடனுதவி

கடந்த 2003 ஆம் ஆண்டில் வன்னிப் பிரதேசத்தில் கிராமிய அபிவிருத்தி வங்கியினால் 2 கோடியே 56 இலட்சத்து 95 ஆயிரத்தி 977 ரூபா கடனாக வழங்கப்பட்டது.

இதில் விவசாயக் கடனாக 1238 பயனாளிகளுக்கு ஒரு கோடியே 66 இலட்சத்து 19 ஆயிரத்தி 254 ரூபாவும் சுயதொழில் முயற்சிக்கடனாக 90 இலட்சத்து 82 ஆயிரத்தி 723 ரூபாவும் வழங்கப்பட்டது.

இந்த வகையில் கிளிநொச்சி மாவட்டத்தில் 898 பயனாளிகளும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 426 பயனாளிகளும், வவுனியா மாவட்டத்தில் 163 பயனாளிகளும், மன்னார் மாவட்டத்தில் 152 பயனாளிகளும் மேற்படி கடன்வசதிகளைப் பெற்றுள்ளதாக வங்கி முகாமையாளர் தெரிவித்தார். (122)

## 3 மாதத்துள் 35 அமைச்சர்களுடன் ஜனாதிபதி தலைமையில் புதிய அரசு

**சரத் அமுனுகம தெரிவிப்பு**

பொதுஜன ஐக்கிய முன்னணி, ஜே.வி.பி. கூட்டமைப்பு மூன்று மாத காலத்துக்குள் 35 அமைச்சர்களுடன் அரசாங்கம் அமைக்கும் என பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சரத் அமுனுகம தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த அரசாங்கம் அமைக்கப்பட்ட பின்னரும் சமாதான முயற்சிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என்று உரையாற்றும்போது குறிப்பிட்ட அவர், இந்தப் பேச்சுக்கள் விடுதலைப்புலிகளுடன் மட்டுமல்லாமல் அனைத்துக் கட்சிகளுடனும் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்தார்.


**ராஜா** யாழ்ப்பாணம்.

இந்தியாவிலும் இலங்கையிலும்
ஒரே தின வெளியீடு
பிரசாந், தியாகராஜன், பானுப்பிரியா
நடித்த
**ஜெய்**
காட்சிநேரம் :
10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
ஆசனங்களை முற்பதிவு செய்துகொள்ளலாம்.
(சி-2197)

திறைஞ்சனல்ஸ் சங்கானை
சிம்பு, சர்மி நடித்த
**காதல் அழிவதில்லை**
காட்சி நேரம்:11.00, 2.45, 6.00, (பு.நே.)
ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)
**HULK**
(சி-2196)


## நெஞ்சில் ஆறாத நினைவலைகள்







**அமரர் ஐயம்பிள்ளை வைத்திலிங்கம்**
(ஓய்வுபெற்ற பொலிஸ் அத்தியட்சகர்)
மலர்வு :- 04.02.1941
உதிர்வு:- 20.01.2003

எமது சகோதரரின் முதலாம் ஆண்டு (திவசம்) இன்று திங்கட்கிழமை (09.02.04) இடம்பெற விருப்பதால் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**சகோதரர்கள்**

**திருமதி ஐயம்பிள்ளை பொன்னம்மாள்**

அம்மா!
எத்தனை ஆண்டுகளானாலும்
எம் ஈரவிழிகள் இன்னும்
காயவில்லை
எத்தனை ஆண்டுகளானாலும்
உம் நினைவும் எம்மைவிட்டு அழியவில்லை.
*சாந்தி சாந்தி சாந்தி*

**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

**சந்தை வீதி (சந்தைக்கு முன்பாக)**
**நவிண்டில்,**
**கரணவாய் வடக்கு, கரவெட்டி.**

(சி-2208)

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானும் கெடும்.
திருக்குறள்

# நமது நோக்கு

## போரா? சமாதானமா? - முடிவெடுப்பது தென்பகுதிச் சிங்கள மக்களேயாவர்!

செந்நாய்... செந்நாயென்று கடைசியில் இந்தா அந்தா வென்று செந்நாயின் வருகையானது அறிவிக்கப்பட்டுவிட்டது.

தேர்தல் பற்றித்தான் கூறுகிறோம்.

இந்தியாவின் சுதந்திரம் நள்ளிரவில்தான் அறிவிக்கப்பட்டதாம்

Freedom at midnight என்று ஆங்கிலத்தில் அதனைச் சொல்வார்கள். "இரவில் வாங்கினோம் - ஆனால்

இன்றும் விடியவேயில்லை....." என்று ஒரு கவிஞர் அதைப் பற்றி நறுக்கென... இறுக்கமாக ஒரு கவிதையும் எழுதியுள்ளார்.

இலங்கையின் ஜனாதிபதி இதற்கு முற்றிலும் மாறாக நள்ளிரவுவேளையில் நாடாளுமன்றத்தைக் கலைத்து, தேர்தலுக்கான நாளையும் அறிவித்துள்ளார்.

தற்போது ஐ.தே.முன்னணி அரசு பதவியேற்ற அன்றே அதற்கான ஆயுட்காலம் மிகக்குறைவு - அதாவது, அற்பாயிசு - என்பது தெரிந்த ஒன்றாகவே இருந்தது.

கொழும்பின் இரட்டை ஆட்சிமுறையில் அதிகாரபூர்வ அரசு ஒருபுறமும், அதிகாரம்மிக்க ஜனாதிபதி ஒருபுறமும் என இரு வேறு திசைகள் நோக்கி முரண் அல்லது எதிர்நிலையில் இயங்கத்தொடங்கியபோதே அரசியல் நெருக்கடிக்கான பிள்ளையார் சுழி போடப்பட்டுவிட்டது.

ரணிலின் சமாதான யாத்திரை குதிரைப்பாய்ச்சலில் ஆரம்பித்து, பொதிசுமக்கும் கழுதையின் நகர்வில் மெதுநடை போடப்பட்டுவரும் நிலையை எட்டுவதற்கு, ஜனாதிபதி தலைமையிலான குழுவினரின் முட்டுக்கட்டைகளும் காரணமாகும்.

நானே ராஜா எனக்கூறும் ரணிலைவிட ஒருபடி அதிகார வகையில் மேலேறி நின்றுகொண்டு - நானே சர்வவல்லமையான சக்கரவர்த்தினி எனக்கூறும் சந்திரிகா, சமாதான முயற்சிகள்மூலம் ரணில் தன்னை மிஞ்சும் ஒருவராக மக்களிடையே, சர்வதேச சமூகத்திடையே இனங்காணப்படுவதை எந்தவகையிலும் விரும்பவில்லை என்பதை கடந்த இரண்டாண்டுகால அவரின் அரசியல் அச்சுறுத்தல்களும், நடவடிக்கைகளும் நிரூபித்தேவந்தன.

சில மாதங்களின் முன்னர் பிரதமர் அமெரிக்கா சென்றிருந்தவேளை, அவர்மேற்கொண்ட அதிரடி அரசியல் செயற்பாடுகள் ஜனாதிபதியின் கூனித்தனத்தின் உச்சவியூகமாக- நாடாளுமன்றத்தைச் செயலிழக்கவைக்கும் திட்டத்தின் நேரக் கணிப்புக்குண்டாக அமைந்தது.

அக்குண்டுதான் நேற்று முன்தினம் நள்ளிரவு நாடாளுமன்றத்தைக் கலைத்துள்ளது.

இது தற்செயலாக தவிர்க்கமுடியாமல் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையேயல்ல.

இரண்டாண்டுகால அரசியல் சதுரங்க விளையாட்டின் இறுதிக் கட்டம் இதுவேயாகும்.

நாடாளுமன்றம் கலைக்கப்படுவதற்கு முன்னரே, அடுத்த தேர்தலுக்கான சகல முன்னேற்பாடுகளும் ஜனாதிபதியால் மேற்கொள்ளப்பட்டு தயார் நிலையில் இருந்தது என்பதை குறிப்பிட்டேயாகவேண்டும். புதிய அரசியல் கூட்டணி அமைக்கப்பட்டு, சர்வவல்லமை உள்ளவர்களாக, அதிபலவீனம் மிக்க அரசியல்வாதிகளால் கணிக்கப்படும் ஜோதிடர்களின் ஆலோசனைகள் பெறப்பட்டு, சுபநேர காலம் ஆய்வு செய்யப்பட்டு, வெற்றி நிச்சயம் என அவர்களால் உறுதிகூறப்பட்ட பின்னர் ஆட்சிக்கலைப்பு அறிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் ஆட்சிக்கலைப்பை நிபந்தனையாக ஆரம்பம்முதலே முன்வைத்து கூட்டணி சேர்ந்த ஜே.வி.பியும், அதனைத் தொடர்ந்து நிர்ப்பந்தித்து, விரைவில் ஆட்சி கலைக்கப்படும் என எதிர்வுகூறி வந்த அனுராவும், ஜனாதிபதி நின்று நிதானித்து முடிவெடுக்க அவகாசம் அளிக்கத் தயாராக இருக்கவில்லை.

ஜனாதிபதி - குழுவினரை பின்நின்று - திரைமறைவில் நின்று இயக்கும் அயலக நாட்டின் அபிலாஷை - உடன் ஆட்சிக் கலைப்பினை ஏற்றுக்கொள்ளாத போதிலும், அவர்களின் அறிவுறுத்தல்களை புறந்தள்ளிவிட்டு, ஜோதிடர்களின் ஆலோசனைகளையும், கூட்டணித் தோழர்களின் பெருவிருப்பையும் நிறைவேற்ற முடிவெடுத்த ஜனாதிபதியின் தீர்மானம் சரியா? பிழையா? என்பதை ஏப்ரல் 2 ஆம் திகதியே தீர்மானிக்கும்.

எது எப்படியோ..., ஜே.வி.பி. எரிகிறவீட்டில் பிடுங்கியது இலாபம் என்ற இலக்கில் செயற்படுகிறது என்பது மட்டும் தெளிவு.

சரி... இந்தத் தேர்தல்... இனி நடந்தே தீரவேண்டும். இன்னும் சில நாட்களில் தேர்த்திருவிழா களைகட்டத் தொடங்கிவிடும்.

இப்போது முடிவெடுக்கும் தகைமையற்ற காபந்து அரசு, தேர்தல் காலத்தில் நடைபெறப்போவதை கண்காணித்துக் கொண்டிருக்க மட்டும் செய்யும். பாதுகாப்பு அமைச்சு ஜனாதிபதியிடம், ஊடகத்துறை லக்ஷ்மன் கதிர்காமரிடம், உள்துறை பொதுஜன ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த ஒருவரிடமே இருக்கும் நிலையில், தேர்தல் வரையிலான காலப்பகுதிக்குள் அவர்களின்கையே ஓங்கி இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

இந்த நிலையில், தேர்தல் வேகம் அதிகரிக்க அதிகரிக்க...

புரிந்துணர்வு மற்றும் போர்நிறுத்தம் தொடர்ந்து நேர்மையாக அரசால் அமுல் செய்யப்படுமா?

அமைதிநிலை - தொடர்ந்து பேணப்படுமா? போன்ற கேள்விகள் பொதுமக்கள் மத்தியில் எழவே செய்யும்.

இதற்கான உத்தரவாதம் மிக்க பதிலை வழங்கவேண்டிய பொறுப்பு சர்வதேச சமூகத்துக்கே உண்டு.

புரிந்துணர்வு உடன்பாட்டின், போர்நிறுத்தத்தின் மற்றும் சமாதான முயற்சிகளின், ஏற்பாட்டாளர்களும் அனுசரணையாளர்களும் அவர்களேயாவார்.

தமிழ் மக்கள் கொழும்பின் அரசியல் தலைமைகளை ஒருபோதும் நம்பியதும் இல்லை. அரை நூற்றாண்டுகால அனுபவ அறிவு அவர்களுக்கு அந்த எண்ணத்தை வலியுறுத்திக் கொண்டே இருக்கிறது.

இந்த நிலையில் சமாதானம் வேண்டுமா? யுத்தம் வேண்டுமா? என்ற கேள்விதான் இந்தத் தேர்தலின் முக்கிய பிரச்சினையாகவும் இருக்கும்.

இதற்கு முடிவுகாண வேண்டியவர்கள் தென்பகுதி சிங்கள மக்கள் மட்டுமே.

## நாடும் நடப்பும்




# அரபு நாடுகளில் பணியாற்றும் பெண்களின் பணத்தில்தான் இலங்கைத் தீவு வாழ்கிறது

### முன்னாள் துணைவேந்தர் பொ.பாலசுந்தரம்பிள்ளை தெரிவிப்பு

எதிர்காலத்தில் மூன்றாம் நிலைக் கல்வியை விரிவாக்குவதன் மூலம், நாட்டின் தரத்தை உயர்த்தமுடியும்.

இவ்வாறு, நேற்று பட்டப்படிப்புக்கள் கல்லூரியின் 25 ஆம் ஆண்டு நிறைவு விழாவில் கலந்துகொண்ட யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பொ.பாலசுந்தரம் பிள்ளை தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் எமது நாட்டில் உயர்கல்வி விரிவாக்கப்படவேண்டும். தற்போது இலங்கைத் தீவில் உயர்தரப்பரீட்சைக்கு சுமார் 2 லட்சத்து 80 ஆயிரம் மாணவர்கள் தோற்றுகின்ற போதிலும், 12 ஆயிரம் மாணவர்கள் மட்டுமே பல்கலைக்கழக அனுமதியைப் பெறுகின்றனர். ஆனால், இந்தியாவில் தமிழ் நாட்டில் மாத்திரம் 43 ஆயிரம் மாணவர்கள். பொறியியல் துறைக்கு அனுமதிக்கப்படுகின்றனர். பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்கள் அனுமதிக்கும் தொகை அதிகரிக்கப்படவேண்டும். உயர்கல்விச் சமூகத்தை உருவாக்கவேண்டும்.

பல்கலைக்கழத் தேவைகள் நிவர்த்திசெய்யப்பட்டு விரிவாக்கப்படவேண்டும். எமது நாட்டில் உள்ள சுமார் 5 லட்சம் பெண்கள் அரபு நாடுகளில் பணிப்பெண்களாக வேலை செய்து கொண்டிருக்கின்றார்கள். இவர்களின் பணத்தில்தான், நாடு வாழ்கின்றது. விவசாயத்தினையோ, கைத்தொழிலையோ தற்பொழுது நம்பி இருக்க முடியாது. இதற்கு, இவ்வாறான துறைகளுக்கு அதிக வேலையாட்கள் தேவையில்லை. நான் சிலதினங்களுக்கு முன்பு கட்டைக்காடு, வெற்றிலைக்கேணி, வத்திராயன் போன்ற பகுதிகளுக்குச் சென்றபோது, கல்வி நிலை மோசமாக பாதிக்கப்பட்டுள்ளதை பார்த்தேன், இவ்வாறான பிரதேசங்கள் போன்று யாழ். குடாநாட்டில் இன்னும் பல பிரதேசங்கள் உள்ளன இவற்றையும் கவனத்தில் எடுத்து அங்கும் கல்விச் செயற்பாடுகளை மேற்கொள்ள உரிய நிறுவனங்கள்,அமைபபுக்கள் முன்வரவேண்டும் எனத் தெரிவித்தார்.

## இராணுவ கோப்ரல் சுட்டுக்கொலை சந்தேகத்தின் பேரில் இருவர் கைது

பதுளை-லுனுகல பகுதியில் கடமையாற்றி வந்த இராணுவ புலனாய்வுப் பிரிவைச்சேர்ந்த கோப்ரல் மரியநாயகம் அலோசியஸ் (வயது 36) என்பவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக இரு செல்வந்தர்கள் - லுனுகல பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன். மேலும் 15 பேரிடமிருந்து வாக்குமூலங்களும் பெறப்பட்டுள்ளன.

கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற இனந்தெரியாத நபர்களின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி, பலத்த காயங்களுடன் பதுளை மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இராணுவகோப்ரல் பின்னர் அங்கு மரணமானார்.

இந்தக் கொலைதொடர்பாகக் கைதான இரு செல்வந்தர்களில் ஒருவர் - அப்பகுதி தேயிலைத்தோட்ட உரிமையாளர் எனவும், மற்றவர் இந்த கோப்ரலுக்கு தங்குமிடவசதி செய்து கொடுத்தவர் எனவும் தெரியவருகிறது.

## கட்டுநாயக்க விமானநிலையம் தனியார் மயப்படுத்த முயற்சி

கட்டுநாயக்க சர்வதேச விமானநிலையத்தை மீள்கட்டமைப்புச் செய்வது தொடர்பான ஆலோசனைகளை, சிங்கப்பூர் நிறுவனம் ஒன்றிடமிருந்து அரசாங்கம் கோரியுள்ளது.

விமானநிலைய மீள்கட்டமைப்புக்கான சிபார்சுகளை இந்த சிங்கப்பூர் நிறுவனம் அடுத்தமாதம் அரசாங்கத்திடம் கையளிக்கவுள்ளது.

இந்தத் திட்டத்திற்கமைய பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம் தனியார் மயபடுத்தப்படவுள்ளது. 35 வீதமான பங்குகள் தனியாருக்கு விற்கப்படவிருப்பதுடன், 65 வீதமான பங்குகளை இலங்கை விமானநிலையம் மற்றும் எயர்லைன்ஸ் நிறுவனம் ஆகியன கொண்டிருக்கும் எனவும் தெரியவருகிறது.

## ஏ-9 வீதியில் வலுவான காரணமின்றி கட்டடங்களைக் கட்டுவதற்குத் தடை!

கண்டி வீதியின் மத்தியிலிருந்து ஒவ்வொரு புறமும் பதினைந்து மீற்றர் தூரத்திற்குள் மதில்கள் உட்பட எதுவித நிர்மாண வேலைகளும் வலுவான காரணங்களின்றி கட்டுவதற்கு அனுமதிக்கபபடமாட்டாது என - வீதி அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் கார்ப் திட்டத்தின்கீழ், கண்டி வீதியான மிருசுவில் தொடக்கம் யாழ்ப்பாணம் வரையான சுமார் 300 கி.மீ. வீதி, இந்த ஆண்டு புனர்நிர்மாணம் செய்யப்படவுள்ளது.

இதனால், வீதியின் அருகேயும், வீதியின் மத்தியிலும் இருந்து பதினைந்து மீற்றர் தூரத்திற்கு எதுவித நிர்மாண வேலைகளும் வலுவான காரணமின்றி மேற்கொள்ள அனுமதிக்கப்படமாட்டாது என வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பிரதம பொறியியலாளர் தெரிவித்துள்ளார்.

# தமிழ்க் கட்சிகளின் ஆதரவு என்பது நம்பத்தகுந்ததல்ல

### ஜே.வி.பி. பிரசாரச் செயலர் விமல்வீரவன்ச தெரிவிப்பு

"தமிழ் கட்சிகளின் ஆதரவு என்பது நம்பத்தகுந்ததல்ல" என்று ஜே.வி.பியின் முக்கியஸ்தரும் அதன் பிரசார செயலாளருமான விமல்வீரவன்ச தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் வடக்குக் கிழக்கில் விடுதலைப்புலிகளின் அதிகாரங்கள் மேலோங்குவதற்கு வழிசமைத்துவிட்டது.

சமாதானப் பேச்சுவார்த்தை என்ற பெயரில் விடுதலைப் புலிகளைப் பலப்படுத்துவதற்குத் தேவையான அனைத்து செயற்பாடுகளையும் மேற்கொண்டு வந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் ஐக்கிய தேசிய முன்னணியும் தற்போது எங்களுடைய கூட்டமைப்பை நிலைத்து நிற்காது என்று குற்றம் சாட்டி வருகின்றது.

இவர்களின் குற்றச்சாட்டுக்களைக் கேட்டுக்கொண்டு நொந்து போவோமாயின் நாடு துண்டாடப்படுவது வெகு தொலைவில் இல்லை என்றும் அவர் தனது கட்சி ஆதரவுப் பத்திரிகையான "லங்கா" வுக்கு தெரிவித்துள்ளார்.

ஶ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையில் சில அடிப்படை முரண்பாடுகள் இருப்பதை அவர் ஏற்றுக்கொண்டுள்ளார்.

தமிழ் மக்களுடைய பிரச்சினைக்கு அதிகாரப் பரவலாக்கல் மூலம் தீர்வு காணப்படவேண்டுமென ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க கூறிவருகிறார்.

இதேவேளை, தமிழ் மக்களுக்கான எந்தவிதமான அதிகாரப்பரவலாக்கலும் தனித்தமிழ் ஈழம் அமைவதற்கே வழி வகுக்கும். எனவே கூடிய பட்சம் உள்ளூராட்சி மட்டத்திலேயே தமிழர்களுடைய கலாசார, தனித்துவத்தைப் பேணக்கூடிய அதிகாரங்களைக் கொடுக்கலாம் என்பதே ஜே.வி.பியின் நிலைப்பாடாகும்.எனவும் அவர் தெரிவித்தார்.

# ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | விண்ணுலகில் |
| --- | --- |
| 13 - 03 - 1955 | 09 - 02 - 1999 |



# வீ.எம்.கே.குலேந்திரன்

## (வீ.எம்.கே. ஜுவலர்ஸ்)

காலமிது உருண்டோடி கண் இமைக்கும் நேரமதில்
ஆண்டுகள் ஐந்தும் கடந்துதான் போனதுவோ! (இறைவா)
எம் குலத்து இந்திரனை நீ அழைத்து கொண்டதனால்
எம்மை எல்லாம் இங்கு மகிழ்விழக்க வைத்து விட்டாய்.
காலங்கள் கடந்தாலும் எம் கவலைகள் கலையாமல்
கனவாகிப் போகாதோ கடந்துசென்ற ஆண்டுகள்தான்
காலமெல்லாம் கண்ணீரால் அஞ்சலித்து நிற்கும்

கிளை :
105, கண்டி வீதி,
சாவகச்சேரி.

V.M.K. ஜுவலர்ஸ்
105, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-2210)

# போராளிகளுடனான மோதலில் ஹெயிட்டில் 3 பொலிஸார் பலி



ஹெயிட்டியின் நான்காவது பிரதான நகரான 'ஹொனைவ்ஸ்'ஸில் - போராளிகளுக்கும் பொலிஸாருக்கும் இடையே நடைபெற்ற மோதலில் மூன்று பொலிஸார் கொல்லப்பட்டனர்.

இந்தப் பிரதேசத்தை இரு நாட்களுக்கு முன்னர் போராளிகள் கைப்பற்றினர். இதனால், கடந்த சனிக்கிழமை மீண்டும் தம்வசப்படுத்திக் கொள்வதற்கு நூற்றிஐம்பதுக்கும் மேற்பட்ட பொலிஸார் அந்தப் பிரதேசத்திற்குள் பிரவேசித்தனர்.

உறுதிப்படுத்தப்படாத செய்திகள் மூலம்- போராளிகள் மறைந்திருந்து நடத்திய தாக்குதலில், 14 இற்கு மேற்பட்ட அதிகாரிகள் கொல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையே, கடந்த புதன்கிழமை பொலிஸ் நிலையமொன்றுக்குத் தீ வைத்த போராளிகள், நூற்றுக்கும் மேற்பட்ட கைதிகளை மீட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கரிபியன் நாடுகளின் தலைவர்கள், நடுவர்களாகச் செயற்பட்டு சமரச முயற்சிகளை மேற்கொண்டுவருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மைக் காலங்களில் அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் அதிகரித்து வருவதாகவும் ஜனாதிபதி 'ஜீன் பேர்ராண்ட் அரிஸ்ற்ரைட்' பதவிவிலகவேண்டும் எனக்கூறியே ஆர்ப்பாட்டத்தில் மக்கள் ஈடுபடுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையே, அண்மையில் பொலிஸாரினால் நடத்தப்பட்ட போராளிகளுக்கெதிரான தாக்குதல், பொதுமக்களைக் காப்பாற்றுவதற்கென நடத்தப்பட்டதாக தொலைத்தொடர்பு அமைச்சின் காரியதரிசி தெரிவித்தார்.

இதனிடையே ஜனாதிபதி அரிஸ்ற்ரைட்- தேர்தல் ஒன்றை நடத்துவதற்கு தயாராக இருந்தபோதும் 2006 வரை தொடர்ந்தும் பதவி வகிக்கப்போவதாக தெரிவித்துள்ளார். ஆனால, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஜனாதிபதியின் மனித உரிமை மீறல்கள், ஊழல்கள் தொடர்பாக அவர் பதவியில் இருந்து வெளியேற வேண்டும் எனத் தெரிவித்துவருகின்றார்.

தற்போது அரசுக்கு எதிராகப் போராடி வரும் போராளிக்குழுவின் தலைவர் ஒருவர், முன்னர் அரசுக்குச் சார்பாக இயங்கிவந்ததாகவும் அவர் கொல்லப்பட்ட பின்னரே அரசுக்கு எதிராக போராட்டங்கள் அதிகரித்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புஷ்ஷு க்குஎதிராகபோட்டியிடும் தகுதியைப் பெற்றார் ஜோன் ஹெரி




அமெரிக்காவில் வொஷிங்ரன், மிக்சிகன் ஆகிய மாநிலங்களில் ஐம்பது வீத வாக்குகளைப் பெற்றுள்ள செனட்டர் ஜோன் ஹெரி தற்போது கேச்குசில் மாநிலத்திலும் வெற்றி பெற்று, ஜனாதிபதி புஷ்ஷிற்கு எதிராகப் போட்டியிடும் தகுதியைப் பெற்றுள்ளார்.

பெர்ஜினியாவில் நடைபெற்ற விருந்தில் தற்போதைய ஜனாதிபதியின் இறுதிநாட்கள் அண்மித்து விட்டதாகத் ஹெரி தெரிவித்தார். தற்போதைய கருத்துக் கணிப்பின்படி ஜோன் ஹெரி - வேர்ஜினியா, ரெனிஸ் ஆகிய தொகுதிகளிலும், வெற்றிபெறும் வாய்ப்புக்கள் அதிகரித்துள்ளதாகத் தெரியவருகிறது.

## காஸாவில்

# இஸ்ரேல் படையினரின் தாக்குதலில் ஜிகாத்தின் பிரதேச பொறுப்பாளர் பலி

(காஸா)

காஸா நகரில் ஜிகாத் இஸ்லாமிய தீவிரவாதக் குழுவின் தலைவரின் பாதுகாவலராகவும், அந்தக் குழுவின் பிரதேச பொறுப்பாளராகவும் கடமையாற்றிய அஸிஸ் மொகமட் சாமி, இஸ்ரேலியப் படையின் எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்டார்.

இந்தத் தாக்குதலில் 11 வயதுச் சிறுவன் ஒருவனும் கொல்லப்பட்டதாகவும் 9 பேர் காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முக்கிய தீவிரவாதக் குழுக்களின் தலைவர்களை கொல்வதற்காகவே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக இஸ்ரேலியப் படையினர் தெரிவித்துள்ளனர்.

இந்தக் கொலைக்கெதிராக பதில் தாக்குதலை மேற்கொள்ளப்போவதாக - இஸ்லாமிய ஜிகாத் தலைவர் ஒருவரும், கொல்லப்பட்டவரின் உறவினர்களும் தெரிவித்தனர்.

இந்தத் தாக்குதலில் 'அஸிஸ் மொகமட்' பிரயாணம் மேற்கொண்ட வண்டி, எறிகணைத் தாக்குதலில் உருக்குலைந்து சிதறியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



அஸிஸின் தாயார்

இஸ்லாமியத் தீவிரவாதிகளுக்கு எதிராக நடத்தப்படும் தாக்குதல்களில் சாதாரண பொதுமக்கள் கொல்லப்படுவதனால், இஸ்ரேலியப் படையினரின் மீது பலஸ்தீன பொதுமக்களிடையே கசப்புணர்வு தோன்றியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# ஆப்கானின் சமாதானப் படையை அதிகரிப்பதற்கு நேட்டோ திட்டம்

ஆப்கானிஸ்தானில் தற்போது கடமையில் ஈடுபட்டுள்ள வெளிநாட்டு சமாதானப் படையினரின் எண்ணிக்கையை அதிகரிப்பது தொடர்பாக, முனிச்சில் - 'நேட்டோ'வின் பாதுகாப்பு அமைச்சர்களின் கூட்டமொன்று நடைபெற்றுள்ளது.

இந்தக் கூட்டத்தில், சமாதானப் படையினரை வழங்குவதற்கு முன்வந்துள்ள நாடுகளின் பெயர்கள் குறிப்பிடப்படவில்லை.

ஆப்கானிஸ்தானின் தலைநகர் காபூலில் தற்போது 6 ஆயிரம் 'நேட்டோ' படையினர் காவற்கடமையில் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் தலைநகர் காபூலில் பணியாற்றிவருகின்றனர். ஆப்கானிஸ்தானின் மற்ற நகரங்களில் பொலிஸார் கடமையாற்றி வருகின்றனர்.

காபூலில் பணிபுரிந்து தற்போது அந்தப் பதவியிலிருந்து ஓய்வுபெறும் கனடாவைச் சேர்ந்த 'அன்டியூ லெஷ்லி' தெரிவிக்கும்போது- ஆப்கானிஸ்தானில் கடமைபுரியும் படையினரின் எண்ணிக்கையை 12 ஆயிரமாக அதிகரிப்பதன் மூலம் பாதுகாப்பை வலுப்படுத்த முடியும் எனத் தெரிவித்தார்.

மேலும் 10 ஆண்டுகள் 'நேட்டோ' படையினர் ஆப்கானிஸ்தானில் தங்கியிருப்பார்கள் எனவும் தெரிவித்தார்.

வெளிநாட்டுப்படைச் சேவையை எதிர்பார்ப்பதற்கு முன்னர் தற்போது ஆப்கானிஸ்தானில் பணிபுரியும் படையினர் தமது சேவையை திறமையாகச் செய்யவேண்டுமென அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் 'டொனால்ட் ரம்ஸ்பீல்ட்' கேட்டுக்கொண்டார்.



# காஷ்மீரில் கிரனைட் வீச்சு இரண்டு பொதுமக்கள் பலி

(காஷ்மீர்)

இந்திய நிர்வாகத்தில் அமைந்துள்ள காஷ்மீர் பிரதேசத்தில் நடத்தப்பட்ட கிரனைட் தாக்குதலில் இருவர் கொல்லப்பட்டும் 28 பேர்வரை காயமடைந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காஷ்மீரின் தலைநகர் சிறிநகரில் உள்ள பஸ்நிலையம் ஒன்றின்மீது நடத்தப்பட்ட தாக்குதலில் மேற்குறிப்பிட்ட சம்பவம் நிகழ்ந்துள்ளது.

காயமடைந்தவர்கள் மூவர் இந்தியப் படையைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காஷ்மீரில் மிதவாதக் குழுக்களுடன் - இந்திய அரசு, பாகிஸ்தானில் நடைபெறவுள்ள பேச்சுவார்த்தைகளின் முன் தொடர்புகள் மேற்கொண்டிருந்ததனாலேயே இந்த தாக்குதல்கள் நடைபெற்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்தத் தாக்குதலின் பின்னர் இஸ்லாமியப் பிரிவினை வாதிகளுக்கும் இந்தியப் படைகளுக்கும் இடையே துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

காஷ்மீர் பிரிவினைவாதிகள் இந்தியாவுக்கு சார்பான குழுத்தலைவர் 'சாகூர் பாபா'வை சுட்டுக்கொன்றுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

காஷ்மீரில் கடந்த 15 ஆண்டுகளாக இந்தியத் துருப்புக்களுக்கு எதிராக காஷ்மீர்ப் பிரிவினைவாதிகள் போரிட்டு வருகின்றனர். பிரிவிதினைவாதிகளுடன் பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து நடத்துவதற்கு இந்திய அரசு தீர்மானித்துள்ளது. ஆனால், தீவிரப் போக்கு கொண்ட பிரிவினைவாதிகள் இந்தப் பேச்சுவார்த்தைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

உலக நோக்கு

# ஈராக்கில் மனிதநேய பணிபுரிவதற்கு 600 ஜப்பான் படையினர் சென்றனர்



(ஜப்பான்)

ஈராக்கின் தென்பகுதியில் அமைந்துள்ள நகரான 'சமவா'வில் பணிபுரிவதற்கென 600 ஜப்பானியப் படையினர் ஈராக்கைச் சென்றடைந்துள்ளனர்.

இவர்கள் 25 இராணுவ வாகனங்களில் குவைத்தின் எல்லையூடாக ஈராக்கிற்குள் பிரவேசித்துள்ளனர்.

மனிதநேயப் பணிகளை மேற்கொள்வதற்காகவே இந்தப் படையினர் ஈராக்கிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

ஆனால், இந்த நடவடிக்கையானது, ஜப்பானின் அரசியல் யாப்புக்கு முரணானதென விமர்சகர்கள் தெரிவித்துள்ளனர்.

ஜப்பானின் நாடாளுமன்றத்தின் கீழ்ச் சபையினால், ஜனவரிமாதம் படையினர் ஈராக் செல்வதற்கான அங்கீகாரம் அளிக்கப்பட்டிருந்தது. ஈராக்கில் பணிபுரிந்துகொண்டிருக்கும் ஜப்பானியப் படையினருடன் இணைந்து கொள்வதற்கு இவர்கள் திட்டமிட்டுள்ளனர்.

## துருக்கியில்

# பூமியதிர்ச்சியில் சிக்கிய சிறுவன் 6 நாட்களின் பின் உயிருடன் மீட்பு



கடந்த 6 நர்ட்களுக்கு முன்னர், துருக்கியில் நடைபெற்ற பூமி அதிர்ச்சியில் - இடிபாடுகளுக்கு மத்தியில் சிக்கியிருந்த மொகமட் கலீம் என்ற 16 வயதுடைய சிறுவன் மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சென்ற திங்கட்கிழமை கொன்யர் என்ற நகரில் நடைபெற்ற பூமி அதிர்ச்சியில் 66 மக்கள் கொல்லப்பட்டிருந்தனர்.

மொகமட் கலீம், 5 நாட்கள் 11 மணித்தியாலங்கள் வரை - உணவு, நீர் எதுவுமின்றி உயிர்வாழ்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீட்புப் பணியாளர்கள் மொகமட் சிக்கியிருந்த பிரதேசத்தை அண்மித்தபோது - கட்டடத்தின் மேல்பகுதியில் இருந்து, மொகமட் சிக்கியிருந்த இடைவெளிவரை காணப்பட்ட பிளாஸ்ரிக்குழாயை அதிரச்செய்து தனது இருப்பிடத்தை மொகமட் வெளிப்படுத்தியதாக மீட்புப் பணியாளர்கள் தெரிவித்தனர்.

நமது ஈழநாடு
nathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland



நாற்சந்தி

"என்ன மணியம் வரேக்குள்ளயே ஒரு மாதிரியாகக் கும்பிட்டுக்கொண்டு வாறாய்... என்ன நடந்தது...?"

"இது எம்.பி கும்பிடுகை... தேர்தல் வருகுதெல்லே... கண்டவை எல்லாம் இனி கும்பிடுவினம்... அப்ப பதிலுக்கு மரியாதைக்கு திருப்பி கும்பிடவேண்டுமெல்லே... அதுதான் இப்பவே அதற்குப் பயிற்சி எடுக்கிறன்.. கனகண்ணை"

"அதுதான் கேட்டன்... எங்கை நீயும் எலக்ஷனில நிக்கப் போறியோ எண்டு பயந்திட்டன்..."

"எனக்கென்ன விசரே... தேர்தல் எங்களுக்கு தேறுதலையோ மாறுதலையோ தராதெண்டு எப்பவோ முடிவெடுத்த பிறகு... உந்தப் பக்கம் தலைவைச்சே படுக்கிறேல்லை...அதுவும் எனக்கு உந்த ஆசையெல்லாம் வருமே... சும்மா... ஒரு முஸ்பாத்திக்குத்தான் கும்பிட்டன்..."

"அது சரி... அம்மையார் நாடாளுமன்றத்தைக் கலைச்சிட்டு தேர்தலுக்கு நாட்குறிச்சிட்டா..."

"உது பிழை... தேர்தலுக்கு நாள் குறிச்சிட்டு தான் நாடாளுமன்றத்தைக் கலைச்சவ எண்டு சொல்லு... சாத்திரிமார் கிரக நிலையை ஆராய்ந்து... இந்த நாளில தேர்தல் நடந்தா அம்மணிக்கு வெற்றி நிச்சயம் என அடிச்சுச் சொன்னவையாம்? வெற்றி நிச்சயம் எண்டவையாமோ.... அதாவது 'ஜெயசிக்குறுய்' எண்டவை யாமோ... முந்தியும் இப்பிடித்தான் நாள், கோள் பார்த்து பிரித் ஓதி ஆசிபெற்றுக் கொண்டுதான் ஜெயசிக்குறுய் இராணுவ நடவடிக்கையை ஆரம்பிச்ச அம்மணியும்.... அவரின் மாமா ஜெனரலும் நாய்படாப்பாடுபட்டு நாறிப் போன கதை தெரியும் தானே...!"

"ஓமோம்... நாளும் கோளும் ஆட்சியையும், போரையும் தீர்மானிக்கும் என்று நம்பினால் இப்பிடித்தான்... மக்கள் தான் எல்லாம் என்பதை அரசியல்வாதிகள் நம்பாத வரை எந்த நாடும் உருப்படவே முடியாது"

தெருவாசி

# சாவகச்சேரியில் 40 வீடுகள் உரிமையாளரிடம் கையளிப்பு!

(சாவகச்சேரி)

சாவகச்சேரி - கச்சாய் வீதியிலுள்ள 40 வீடுகள் உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டன.

நேற்றுமுன்தினம் இந்த உத்தியோகபூர்வ வைபவம் சாவகச்சேரியில் இடம்பெற்றது. இந்த வைபவத்தில், யாழ்.மாவட்டக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால, 52 ஆவது படையணித் தளபதி பிரிகேடியர் சந்திரசிறி 521 ஆவது படைத்தளபதி பிரிகேட் கொமாண்டர் கேணல் டயஸ் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இந்தச் வைபவத்தின்போது, கச்சாய் வீதியிலுள்ள நகரச் சுத்திகரிப்பாளர்களுக்குச் சொந்தமான 24 வீடுகளும், சாவகச்சேரி ரயில் நிலையத்துக்குச் சமீபமாக 15 வீடுகளும் மற்றும் காணிகளும் உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டன.

இந்த வீடுகள் தமது கட்சியால் எடுக்கப்பட்ட முயற்சியினால் உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டதென, ஈ.பி.டி.பி கட்சி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# படையினர் - புலிகள் வவுனியாவில் சந்திப்பு

வவுனியா வைரவப்புளியங்குளத்தில் அமைந்துள்ள போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் வவுனியா மாவட்ட படைத்தளபதி மேஜர் ஜெனரல் சிசிர விஜே சூரியவுக்கும், வவுனியா மாவட்ட அரசியற்துறை பொறுப்பாளர் எழிலனுக்கும் இடையில் சந்திப்பு ஒன்று நடைபெற்றது.

நேற்றுக்காலை 9.00 மணிக்கு ஆரம்பமான இந்தச்சந்திப்பு சுமார் ஒன்றரை மணித்தியாலங்கள் வரை நீடித்தது.

வவுனியா இராணுவச் சோதனைச் சாவடியில் வைத்து கடந்த ஐந்தாம் திகதி இரண்டு விடுதலைப்புலிகள் சயனைற்வில்லைகள் கட்டியிருந்தார்கள் எனக்கூறி அவர்களைத் தடுத்து வைத்துப் படையினர் நீண்ட நேரம் விசாரணை செய்திருந்தனர்.

இது தொடர்பாக, வவுனியா மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் எழிலன் தமது ஆட்சேபத்தை கண்காணிப்புக் குழுவிடம் எழுத்து மூலம் தெரிவித்திருந்தார்.

இந்த விடயம்தொடர்பாகவே நேற்றைய சந்திப்பு இடம்பெற்றது. இந்தச் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த வன்னி மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சிசிர விஜயசூரிய,

இரண்டு விடுதலைப் புலிகளை தடுத்து வைத்துப் படையினர் விசாரணை நடத்தியமை எனக்குத் தெரியாமல் நடந்ததாகும். இந்தச்சம்பவத்தையிட்டு நான் மனம் வருந்துகிறேன். இனிவரும் காலங்களில் இவ்வாறான சம்பவம் நடைபெறாமல் பார்த்துக் கொள்ளப்படும்.

அத்துடன் சயனைற் வில்லைகளுடன் விடுதலைப்புலிகள் இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வந்து தமது அரசியல் பணிகளை செய்யலாம்.

தற்போது நாட்டில் அரசியல் மாற்றம் ஏற்பட்டுள்ளது. இதனால் எமக்கு எவ்வித பிரச்சினையும் இல்லை. நிலைமை சுமூகமாக தொடர்ந்து இருக்க வேண்டும் என்றே நாம் விரும்புகின்றோம் எனவும் அவர் தெரிவித்தார். (03)

# தமிழ்நாட்டுக்கான கப்பல் சேவையில் இரு நாடுகளுக்கும் அக்கறையில்லை!

இலங்கைகும் - தமிழ்நாட்டிற்கும் இடையில் நடைபெறவிருந்த கப்பல் சேவையை நடத்துவதற்கு இருநாட்டு அரசுகளும் எந்தவித ஆர்வமும் காட்டவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த கப்பல் சேவையை நடத்துவது தொடர்பாக, கடந்த ஆண்டு, முதன்முதலில் இந்திய விஜயத்தின் போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்திய அதிகாரிகளுடன் கதைத்திருந்தார்.

இந்தக் கப்பல் சேவையை நடத்துவதன் மூலம் இருநாடுகளுக்கும் இடையிலான தொடர்புகளை அதிகரிக்கத் திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால், தமிழ் நாட்டில் தற்போதுள்ள அரசியல் நிலையில், இந்தக் கப்பல் சேவையை நடத்தமுடியாதென இந்திய அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை, இந்தத் திட்டத்தின்படி கொழும்புக்கும் - கேரளாவுக்கும் இடையில் இந்தக் கப்பல் சேவையை நடத்த முயற்சித்த போதும், அதனையும் பாதுகாப்புக் கார ணங்களைக் காட்டி தமிழ்நாட்டு அரசால் நிராகரிக்கப்பட்டது.

# சமாதானம் மற்றும் அபிவிருத்திக்கு பாதகமான விளைவை ஏற்படுத்தும்!

## நாடாளுமன்றக் கலைப்புக் குறித்து கருஜெயசூரிய

(கொழும்பு)

நாட்டுக்குத் தேர்தலொன்று தேவையற்ற இந்தச் சந்தர்ப்பத்தில் பொதுத்தேர்தல் அறிவிக்கப்பட்டமை, சமாதானத்திற்கும் எதிர்கால அபிவிருத்தித் திட்டங்களுக்கும் பாதகமான விளைவை ஏற்படுத்துமென ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜெயசூரிய தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமாலை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போதைய சூழ்நிலையில் தோதலொன்று அவசியமாவென மதத் தலைவர்கள், கல்விமான்கள், வர்த்தக சமூகம், இலங்கைக்கு நிதியுதவி வழங்கும் நாடுகள் உட்பட சகல தரப்பினரும் தெரிவித்திருந்த சூழலிலேயே, ஜனாதிபதி சந்திரிகா நாடாளுமன்றத்தைக் கலைத்து, தேர்தலுக்கு உத்தரவிட்டிருக்கிறார்.

இந்தத் தேர்தலை நாங்கள் எதிர்பார்க்கவில்லை. நாட்டில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களும், சமாதான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும் இந்தச் சூழ்நிலையில் இவ்வாறான அறிவிப்பு பல்வேறான பாதிப்புக்களை ஏற்படுத்துமென்றும் அவர் குறிப்பிட்டார்.

# கிறிஸ்தவ தொண்டர் நிறுவனம்மீது நேற்று பெற்றோல் குண்டுத்தாக்குதல்

(கொழும்பு)

அநுராதபுரம் - ஹெபிற்றிக் கொலாவ நகரத்தில் நேற்றுக்காலை இடம்பெற்ற பெற்றோல் குண்டுத் தாக்குதல் சம்பவம் ஒன்றில் கிறிஸ்தவத் தொண்டர் நிறுவனமான 'வேர்ல்ட் விஷன்' என்ற அமைப்பின் அலுவலகக் கட்டடம் முற்றாகச் சேதமடைந்தது.

இந்தச் சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பெயரில் மூன்று பௌத்த பிக்குகளை வான் ஒன்றுடன் ரம்பாவ நகரத்தில் ஹெபிற்றிகொலாவைப் பொலிஸார் கைதுசெய்தனர்.

கைதுசெய்யப்பட்ட வான் போலியான வாகனப் பதிவு இலக்கத்தைக் கொண்டிருந்ததாகவும் குண்டுத் தாக்குதலை இவர்களே மேற்கொண்டுள்ளனர் என்ற சந்தேகத்திற்குரிய தடயங்கள் கிடைத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட பௌத்த பிக்குகள் மூவரும் ஹோமகம, பிலியந்தல, களனி ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# புதிய அரசியல் நிலைமை குறித்து சுதந்திரக்கட்சி—ஜே.வி.பி. பேச்சு!

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதைத் தொடர்ந்து நாட்டில் தற்போது எழுந்துள்ள நிலைமை குறித்து, சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், ஜே.வி.பியும் நேற்று சுமார் இரண்டு மணிநேரம் விசேட பேச்சுவார்த்தை ஒன்றை கொழும்பில் நடத்தின.

இந்தச் சந்திப்பில் ஜே.வி.பி. சார்பாக அதன் தலைவர் சோமவன்ச அமரசிங்க, பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா, பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச ஆகியோரும் - சிறிலங்கா சுதந்திரக்கட்சி சார்பில், ஊடகத்துறை அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், கட்சியின் ஊடகப் பேச்சாளர் மங்கள சமரவீரவும் கலந்துகொண்டதாக ஜே.வி.பி. விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

எதிர்வரும் தேர்தலில் வெற்றி பெற்று ஏற்படுத்தவுள்ள அரசாங்கம் குறித்து இந்தச் சந்திப்பில் விசேடமாகக் கலந்துரையாடப்பட்டதாக அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

## தமிழ்க்கட்சிகள்...

ளைக் கேட்டுக்கொள்கின்றோம்.

இதேவேளை - தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்வது தொடர்பாக ஆராய்வதற்காக நாளை கொழும்பில் சந்தித்துப் பேசவிருப்பதாகவும் தெரியவருகிறது.

## தேர்தலை...

உயர்ஸ்தானிகர் நிருபம் சென்னுக்கும் - ஜனாதிபதிக்கும் இடையில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற சந்திப்பு வழமையாக நடைபெறும் சந்திப்பு என்றும் உயர்ஸ்தானிகர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

## அச்சம் காரண...

கூட்டணியை உருவாக்கி செயற்படுவதற்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்திருந்தார். ஆனால் இவரது தற்போதைய செயற்பாடு முரண்பட்ட வகையில் உள்ளது.

அத்துடன், சுதந்திரக்கட்சிக்கும், ஜே.வி.பிக்கும் இடையில் உருவாக்கப்பட்ட முன்னணி, தொடர்ந்தும் அரசாங்கத்தை எதிர்க்க முடியாதெனவும் அவர் தெரிவித்தார்.

## ஐக்கிய மக்கள்....

என்பது குறிப்பிடத்தக்கது.

ஜே.வி.பியின் நந்தன குணதிலக இந்த முன்னணியின் தலைவராகவும், சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் சுசில் பிரேம ஜயந்த பொதுச்செயலாளராகவும் நேற்று முன்தினம் தெரிவுசெய்யப்பட்டிருந்தனர்.

இன்று நடைபெறவுள்ள கூட்டத்தில் முன்னணிக்கான ஏனைய நிர்வாகிகள் நியமிக்கப்படவுள்ளனர்.

## அரசியற் சூழ்நிலை...

னத்தை மேற்கொண்டார்.

நாட்டையும், இனத்தையும், மதத்தையும் பாதுகாக்கும் நோக்கோடு - பொதுஜன ஐக்கிய முன்னணியினதும், குறிப்பாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியினதும் கோரிக்கைகளை ஆராய்ந்தபின்னரே, ஜனாதிபதி சந்திரிகா இவ்வாறான முடிவொன்றை எடுக்க நேரிட்டது.

இருபிரதான அரசியல் கட்சிகளையும் ஒன்றிணைத்து, நாட்டின் பிரதான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஜனாதிபதி யோசனைகளை முன்மொழிந்தபோதிலும், அது ஏற்கப்படாத நிலையில் நாடாளுமன்றத்தைக் கலைப்பதைத் தவிர வேறு வழி இருக்கவில்லை என்று அமைச்சர் டி.எம்.ஜெயரத்ன மேலும் தெரிவித்தார்.

## வரப்போகும்...

நாட்டு நிதியுதவிகளையும் பெறுவதற்குக் காரணமாக இருந்தது.

ஆனால், இந்த அனைத்துச் செயற்பாடுகளும் தற்போதைய நிலையில் ஸ்தம்பிதமடைந்துள்ளன.

தமது கூட்டணியே நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றிபெறுமென்று மகிந்த ராஜபக்ஷ பெருமை பேசிவருகிறார். அத்துடன், தமது கட்சி அதிகாரத்துக்கு வந்தால், பிரதான பிரச்சினையான இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான சமாதானப் பேச்சுக்கள் முன்னெடுக்கப்படும் என்றும் கூறியுள்ளார்.

ஆனால், தற்போதைய நிலை குறித்து புலிகள் வெளியிட்டுள்ள கருத்துக்களில் தெற்கில் நிலையான அரசாங்கம் ஒன்றுடனேயே பேச்சு நட்த்த முடியுமென்று கூறியுள்ளனர் என்றும் மலிக் சமரவிக்கிரம மேலும் தெரிவித்தார்.

## நாடாளுமன்றக் கலைப்...

முன் ஜனாதிபதியும் பிரதமரும் தமக்கிடையேயான வேறுபாடுகளைக் களைந்து விடுவார்கள் என இந்த நாடுகள் எதிர்பார்த்திருந்தன.

இதேவேளை, ஜனாதிபதியால் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்திடமிருந்து முன்னர் மூன்று அமைச்சுக்களைப் பொறுப்பேற்றமையால் சர்வதேச சமூகம் வழங்கவிருந்த 250 மில்லியன் டொலர் இழக்கப்பட்டிருப்பதாக பிரதமர் ரணில் முன்னர் குறிப்பிட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## முக்கியஸ்தர்களின்...

இடையில் கூட்டணி ஏற்பட முன்னின்ற சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கியஸ்தர்கள் சிலரே ஜனாதிபதிக்கு நாடாளுமன்றக் கலைப்புத் தொடர்பான அழுத்தத்தைக் கொடுத்தவர்களாவர்.

இதனையடுத்து நேற்று முன்தினம் தனது வாசஸ்தலத்திற்கு தோதல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்காவை அழைத்த ஜனாதிபதி நாடாளுமன்றக்கலைப்புத் தொடர்பாக அவருடன் பல மணிநேரம் பேச்சுநடத்தினார்.

இதன் பின்னரே ஜனாதிபதி நாடாளுமன்றத்தைக் கலைக்க முயற்சி எடுத்ததாகவும் அந்த இராஜதந்திரிகள் தெரிவித்தனர். (01)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 09.02.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.